
மனித உரிமைகளுக்கான

# குழந்தைகளின் குரல்




மனித உரிமைகளுக்கான குழந்தைகளின் குரல் – 61 – 2012

# குழந்தை உரிமைகள் உடன்படிக்கை - 20 ஆண்டுகள் நிலை அறிக்கை

# விண்ணப்பம்

**குழந்தை உரிமைகள் சர்வதேச உடன்பாட்டு தீர்மானங்களை நிறைவேற்றவும் அரசமைப்பு சட்டத்தில் உரிய மாற்றங்கள் செய்யவும் உடனடி நடவடிக்கைகள் எடுக்க வேண்டி இந்திய அரசுக்கு ஒரு விண்ணப்பம்.**

1. குழந்தை உரிமைகள் மாநாடு (சிஆர்சி) நிறைவேற்றப்பட்டு 20வது ஆண்டு 2009 நவம்பர் 20 அன்று நிறைவடைந்தது. பன்னாட்டு மனித உரிமைகள் உடன்பாட்டில் அங்கீகரிக்கப்பட்ட, பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டு உடன்பாட்டை வெளியிடப்பட்டது. இந்தியா அந்த உடன்பாட்டை 1992ல் அங்கீகரித்தது. உலகம் முழுவதும் உள்ள அனைத்துக் குழந்தைகளின் உயிர்வாழ்வு, வளர்ச்சி, பங்கேற்பு, பாதுகாப்பு ஆகியவை தொடர்பான தரங்களை விரிவான முறையில் அந்த உடன்பாடு முன்வைத்திருக்கிறது. குறிப்பாக, 18வயதுக்கு குறைந்த அனைவரும் குழந்தைகளே என அந்த உடன்பாடு வரையறுத்திருக்கிறது. அடிப்படை மனித உரிமைகளையும், மனிதர்களின் சுயமரியாதை, மாண்பு ஆகியவற்றையும் மறு உறுதி செய்கிற அந்த உடன்பாடு சமூக முன்னேற்றத்தையும், பரந்த சுதந்திரத்தின் அடிப்படையில் சிறப்பான வாழ்க்கைத் தரங்களையும் வலியுறுத்துகிறது. 1992 டிசம்பர் 11ல் அந்த உடன்பாட்டில் இந்தியா கையெழுத்திட்டது. அதன் மூலம் அனைத்துக் குழந்தைகளின் உரிமைகளை உறுதிப்படுத்தவும், பாகுபாடின்மை கோட்பாடுகளை உயர்த்திப் பிடிக்கவும், குழந்தைகளின் அதிகபட்ச நலன்களை பாதுகாக்கவும் முடிவுகள் எடுப்பதில் குழந்தைகளின் பங்கேற்பை உறுதிப்படுத்தவும், குழந்தை உரிமைகள் தொடர்பான அனைத்து கொள்கைகள், நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் நீதித்துறை நடவடிக்கைகள் அனைத்திலும் நம்பகத்தன்மையை (குழந்தைகளுக்கு முன்னுரிமை) உறுதிப்படுத்தவும் இந்திய அரசு ஒப்புக்கொண்டுள்ளது.

   ஒருவகையில் அனைத்து உரிமைகளையும் ஒட்டுமொத்தமாக இணைத்துக் கூறுகிற உலக மனித உரிமைகள் உடன்பாடுகளில் இதுவும் ஒன்றாகும். இதில் பொருளாதார, சமூக, பண்பாட்டு உரிமைகளும், குடியுரிமைகளும், அரசியல் உரிமைகளும் உள்ளடங்கியுள்ளன. அத்துடன் அசாதாரணமான, அபாயகரமான நிலைமைகளில்(போர், இயற்கைச் சீற்றம், கலவரங்கள் போன்றவற்றில்) குழந்தைகளின் உரிமைகள், முறையான சட்ட நடைமுறைகளுக்கான உரிமைகள் ஆகியவையும் இந்த உடன்பாட்டில் இணைந்துள்ளன. எனினும், இந்தியாவில் சிஆர்சி உடன்பாடு எந்த அளவிற்கு அமலாக்கப்பட்டிருக்கிறது என்பது குறித்த அரசு அறிக்கை திருப்திகரமாக இல்லை. பல நேரங்களில், ஐ.நா. குழந்தை உரிமைகள் குழுவின் முன் இந்தியா அளித்துள்ள அறிக்கைகள் வெளிப்படையானதாக இல்லை. மேலும் தவறான தகவல்களைக் கூறுவதாகவும் இருந்துள்ளன. அந்தக் குழு இந்திய அரசுக்கு தெரிவித்த முதல்நிலை கருத்திலும், இறுதியான கருத்திலும், அந்த அறிக்கைகள் போதுமானதாக இல்லை என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பல்வேறு சமூக அமைப்புகள் இக்குழுவிடம் சமர்ப்பித்த மாற்று அறிக்கைகளை ஓரளவு ஆழமாக ஆராய்ந்தால்கூட, சிஆர்சி உடன்பாட்டின்படி குழந்தை உரிமைகளைப் பாதுகாப்பதில் மத்திய–மாநில அரசுகள் எந்த அளவிற்கு அலட்சியமாக இருந்துவந்துள்ளன என்பது தெரியவருகிறது. குறிப்பாக குழந்தை உரிமைகள் தொடர்பாக இக்குழு முன்வைத்த வழிகாட்டல்களின் அடிப்படையில் குழந்தைகளுக்கு எந்த அளவிற்கு உரிமைகள் கிடைத்துள்ளன என்பது பற்றிய அறிக்கை இதைத் தெளிவுபடுத்துகிறது.

2. சிஆர்சி உடன்பாட்டை அங்கீகரிப்பதற்கு 40 ஆண்டுகளுக்கு முன்பாக இந்திய அரசமைப்பு சாசனத்தில் குழந்தை உரிமைகளுக்கு ஒரு முக்கிய இடம் அளிக்கப்பட்டிருந்தது. சாசனத்தின் 14வது பிரிவு சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதை உறுதிப்படுத்துகிறது. 15வது பிரிவு பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் சிறப்பு விதிகளை ஏற்படுத்தியுள்ளது. 21வது பிரிவு வாழ்க்கை பாதுகாப்பையும் தனிமனித சுதந்திரத்தையும்

உறுதிப்படுத்துகிறது. 19வது பிரிவு பல்வேறு சுதந்திரங்களை உறுதிப்படுத்துகிறது. 21(A) பிரிவு அனைத்துக் குழந்தைகளுக்கும் (6–14 வயது) இலவச, கட்டாயக் கல்வியை உறுதிப்படுத்துகிறது. 24வது பிரிவு ஆபத்தான பணிகளில் குழந்தைத் தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்படுவதற்கு தடை விதிக்கிறது. 39(e) பிரிவு சுரண்டலிலிருந்தும், சின்னஞ்சிறு வயதில் தவறான முறையில் பயன்படுத்தப்படுவதிலிருந்தும் குழந்தைகளைப் பாதுகாக்க வழி செய்கிறது. 45வது பிரிவு குழந்தை பருவத்தின் தொடக்க நிலை பாதுகாப்பையும் கல்வியையும் வழங்க நடவடிக்கைகள் எடுப்பதற்கான கடமைப் பொறுப்பை அரசுக்கு ஏற்படுத்துகிறது. 23வது பிரிவு குழந்தைகளை விபச்சாரத்தில் ஈடுபடுத்துவதற்கும், கட்டாய வேலைகளில் ஈடுபடுத்துவதற்கும் தடை விதிக்கிறது. 39(F) பிரிவு அனைத்து குழந்தைகளின் வளர்ச்சியை வலியுறுத்துகிறது. இளைஞர்களை அனைத்துவிதமான சுரண்டல்களிலிருந்தும், தார்மீக முறையிலும் நேரடியாகவும் கைவிடப்படுவதிலிருந்தும் பாதுகாக்கிறது. 46வது பிரிவு நலிவுற்ற பிரிவுகள், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் ஆகியோரின் கல்வி மற்றும் பொருளாதார நலன்களை உயர்த்த வழி செய்கிறது. 47வது பிரிவு ஊட்டச்சத்து அளவையும், வாழ்க்கைத் தரங்களையும், பொது சுகாதாரத்தையும் உயர்த்துவது அரசின் கடமை என்று கூறுகிறது.

3. ஆயினும் இதில் சுவாரஸ்யமான விஷயம் என்னவென்றால், சிஆர்சி உடன்பாட்டை அமலாக்கத் தொடங்கிய இந்த 20ஆண்டு காலம்தான், இந்தியாவில் முக்கியமான சமூகப் பொருளாதார, பண்பாடு, அரசியல் மற்றும் சுற்றுச்சூழல் மாறுதல்கள் மேற்கொள்ளப்பட்ட ஆண்டுகளும் ஆகும். இவை குழந்தைகளுக்கு பாதகமான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. 1991ல் இந்திய அரசின் பொருளாதாரக் கொள்கையில் ஒரு பெரும் மாற்றம் கொண்டுவரப்பட்டது. அது, விடுதலைக்குப் பிறகு உருவாக்கப்பட்ட சுயசார்புக் கொள்கைகளை அப்புறப்படுத்தி, தற்போதைய நவீன தாராளமய அமைப்புக்கு ஏற்ற கொள்கைகளை இறக்குமதி செய்வதாக மாறியது. உலகமய முதலாளித்துவ பொருளாதாரத்தோடு முழுமையாக இணைவதற்கு இட்டுச்சென்றது. இதே 20 ஆண்டு காலத்தில்தான் இரண்டு அரசியல் கட்சிகளுக்கிடையேயான ஏற்பாடுகள் என்பதிலிருந்து ஒரு சிக்கலான கூட்டணி அரசியல் என்பது உருவானது. இதே காலகட்டத்தில் “புதிய சமூக இயக்கங்கள்” என்று சொல்லப்படக்கூடிய இயக்கங்கள் முன்னுக்கு வந்தன. இதே காலகட்டத்தில், ஒடுக்கப்பட்ட பல்வேறு பிரிவினரின் குரல்கள் வலுப்பட்டன. பிற்படுத்தப்பட்ட சாதிகள், தலித்துகள், பழங்குடியினர், பெண்கள், சிறுபான்மையினர் உள்ளிட்டோரின் குரல்கள் மேலெழுந்தன. இந்த மாற்றங்கள் அனைத்துமாகச் சேர்ந்து இந்தியாவில் சிஆர்சி உடன்பாடு செயல்படுத்தப்படுவதிலும், குழந்தைகளின் உரிமைகளிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. கட்டமைப்பு மாறுபாடு என்று வர்ணிக்கப்படுகிற இன்றைய மையமான பொருளாதாரக் கொள்கைகள் உண்மையில் அரசின் பங்களிப்பை மறுவரையறை செய்வதாக, அரசு தனது கட்டுப்பாடுகளை கைவிடுகிற கொள்கைகளாக, உள்நாட்டுப் பொருளாதாரத்தை பன்னாட்டு உற்பத்தி, விலை, வர்த்தகம், நிதிச் சுதந்திரம் ஆகியவற்றோடு இணைப்பதாக இருக்கின்றன. இவை குழந்தைகளைப் பொறுத்தவரையில் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன.

கடந்த 20 ஆண்டுகளில் விவசாயத்துறை மிக விரிவான, ஆழமான மாற்றங்களைச் சந்தித்துள்ளது. இன்று இந்திய உழைக்கும் மக்களில் 52 சதவீதத்தினர் மட்டுமே விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். 1994–95ல் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) விவசாயத்துறையின் பங்கு 30 சதவீதம் என்ற உயர்ந்த அளவில் இருந்தது. அது 2004 – 05ல் 18.9 சதவீதமாகவும், 2008 – 09ல் 15.7 சதவீதமாகவும் வீழ்ச்சியடைந்துவிட்டது. இதைவிட மிகுதியாக கவலை தருவது என்னவெனில் உணவுதானிய உற்பத்தி வளர்ச்சி விகிதம் ஆண்டுக்கு 0.5சதவீதமாக சரிவடைந்திருக்கிறது என்பதுதான். 2004 – 2005 ஆண்டுகளுடன் நிறைவடைந்த 30 ஆண்டு காலத்தில் தனிநபருக்குக் கிடைத்துவந்த சராசரி உணவுதானிய அளவு ஆண்டுக்கு 157 கிலோவாகக் குறைந்துவிட்டது. 1989 – 1991ல் அது 177 கிலோவாக இருந்தது. ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1997 – 2002) விவசாயத்திற்கான அரசு முதலீடு 42,226 கோடி ரூபாயாக கூர்மையாகச் சரிவடைந்தது. 2004 – 05ல் 20.5 சதவீதமாக இருந்த இந்த முதலீடு 2008 – 09ல் 17.6 சதவீதமாக குறைந்துவிட்டது. 1985 – 90 காலகட்டத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 14.5 சதவீதமாக இருந்த ஊரக மேம்பாட்டு

செலவினங்கள், 2006ல் வெறும் 5 சதவீதமாக திட்டமிட்டமுறையில் குறைக்கப்பட்டுவிட்டது. இதில் வேடிக்கை என்னவென்றால் அரசாங்கத்திடம் மிக அதிக அளவில் உணவுதானியங்கள் இருப்பில் உள்ளன என்பதுதான். இதன் அர்த்தம் என்னவென்றால், அரசின் மேற்படி கொள்கைகளுக்காக கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரம் வெட்டிச் சுருக்கப்படுகிறது என்பதுதான். இதன் பின்னணியில்தான் நாட்டின் விவசாயிகளின் தற்கொலைகள் பெருமளவிற்கு அதிகரித்துள்ளன(குறைந்தது 2 லட்சம் விவசாயிகள் தற்கொலை செய்துகொண்டனர்).

இப்படிப்பட்ட விரிவான மாற்றங்களால் கிராமங்களிலும் நகரங்களிலும் உள்ள குழந்தைகள்தான், குறிப்பாக விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்ட குழந்தைகள்தான் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். அதன் அறிகுறியாக சத்துணவு நுகர்வு, பாதுகாக்கப்பட்ட குடிநீர் நுகர்வு ஆகியவை பெருமளவிற்கு குறைந்துள்ளன; குழந்தை மரண விகிதம் அதிகரித்துள்ளது; பள்ளிகளுக்கு செல்லாமல் இருக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை, குழந்தைத் தொழிலாளர் எண்ணிக்கை, கருவிலேயே பாலினம் அறிந்து கருக்கலைப்பு செய்தல் ஆகியவையும் அதிகரித்துள்ளன. மேலும் கிராமப்புற குடும்பங்கள், தலித்துகள், பழங்குடியினர், நாடோடியினத்தினர் போன்ற ஒடுக்கப்பட்ட சமூகங்கள் ஆகியோரின் கலோரி நுகர்வு அளவு மிகவும் சரிவடைந்துள்ளது. அது இப்பிரிவுகளைச் சேர்ந்த குழந்தைகளின் உடல் நலத்தை ஒட்டுமொத்தமாகப் பாதித்துள்ளது. மக்கள் தங்கள் இடத்தைவிட்டு வேறு இடங்களுக்கு புலம்பெயர்வது அதிகரித்து வருகிறது. இது குழந்தைகளுக்கு பெருமளவில் புதிய பிரச்சனைகளைக் கொண்டு வருகிறது. கல்வி, உரிய நேரத்தில் நோய்த்தடுப்பு மருந்து, நாகரீகமான தரமான குடியிருப்பு, பாதுகாப்பு போன்ற அடிப்படை விஷயங்களில் குழந்தைகளுக்கு புதிய பிரச்சனைகள் ஏற்பட்டுள்ளன.

4. குழந்தைகளின் உரிமைகளை உறுதிப்படுத்துவதில், சிஆர்சி விதிகளை ஒரு நடைமுறை உண்மையாக மாற்ற வேண்டுமென்றால் மத்திய அரசு இந்தியாவின் அரசமைப்பு சாசனத்தில் சில முக்கிய நடவடிக்கைகளை மேற்கொண்டாக வேண்டும். மத்திய அரசு எடுக்க வேண்டிய முதல் நடவடிக்கை குழந்தை உரிமைகளுக்கான விரிவான கொள்கை ஒன்றை இறுதிப்படுத்துவதாகும். 1974ம் ஆண்டின் தேசிய குழந்தைகள் கொள்கை காலாவதியாகிப்போன ஒன்றாக இருக்கிறது. 2003ல் முன்வைக்கப்பட்ட குழந்தைகளுக்கான தேசிய சாசனம் ஒரு பலவீனமான ஆவணமாகவே உள்ளது. அது 1974ம் ஆண்டின் குழந்தைகள் கொள்கையை மாற்றியமைப்பதற்கு இல்லை. அத்துடன் உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறை அதிலே இல்லை என்பது குறித்து குழந்தை உரிமைகள் குழு கடுமையாக விமர்சித்திருக்கிறது. 2005ம் ஆண்டின் குழந்தைகளுக்கான தேசிய நடவடிக்கைத் திட்டம் முழுமையான ஒரு ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டியுள்ளது. அந்த ஆய்வில் குழந்தைகளின் கருத்துகளும், குழந்தை உரிமை பாதுகாவலர்களின் கருத்துகளும் இணைக்கப்பட வேண்டும். ஆனால் இப்போது அது சில நல்ல நோக்கங்களை வெளிப்படுத்துகிற ஆவணமாக மட்டுமே இருக்கிறது. அவற்றில் பல நோக்கங்கள் அதற்கான காலக்கெடு முடிந்த பிறகும் கூட இன்னும் நிறைவேற்றப்படவில்லை. இன்னொருபுறத்தில் மத்திய அரசு கடந்த 20 ஆண்டு காலத்தில் ஒருசில கொள்கை மாற்றங்களையும் சட்டமாற்றங்களையும் கொண்டுவர தேர்ந்தெடுத்து சில நடவடிக்கைகளை மேற்கொண்டது.

2005ல் தேசிய குழந்தை உரிமை பாதுகாப்பு ஆணையம் (என்சிபிசிஆர்) ஒரு சட்டபூர்வ அமைப்பாக ஏற்படுத்தப்பட்டது. அதேபோல் குழந்தைகளின் தேவைகள் 11வது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டன. சில குறிப்பிடத்தக்க சட்ட மாறுதல்களாக 2006ம் ஆண்டின் குழந்தைத் திருமண தடைச் சட்டம், 2006ஆம் ஆண்டின் சிறார் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்திருத்தம், 1994ல் கொண்டுவரப்பட்ட (பிறக்கும் குழந்தைகளின் குறைபாடுகளைக் கண்டறிய உதவும் மருத்துவ தொழில் திட்டம் (பாலினத்தை தெரிவு செய்வதை தடுத்தல்), கருவுறுவதற்கு முன்பு சேர்த்து) சட்டத்திருத்தம் போன்றவையாகும். குழந்தைகளின் வாழ்க்கையில் மறைமுகமாகத் தாக்கம் செலுத்தக்கூடிய புதிய சட்டங்களும் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. பழங்குடியினர் மற்றும் பாரம்பரிய வனத்தில் வசிக்கும் பிற மக்கள் (வன பாதுகாப்பு உரிமை)– 2006, தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம், தகவல் உரிமைச் சட்டம் ஆகியவை அவற்றில் குறிப்பிடத்தக்கதாகும்.

5. சிஆர்சி சாசனத்தின் சிகரமாக இருப்பது18 வயதுக்கு கீழ்ப்பட்டோர் அனைவரும் குழந்தைகளே என்ற வயது நிர்ணயிப்பாகும். இந்த விதி அதன் முழு உணர்வோடு பயன்படுத்தப்படாமல் அதை மீறும் வகையிலேயே பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. இந்தியாவின் சில சட்டங்களில் குழந்தையின் அதிகபட்ச வயது 18 என வரையறுக்கப்பட்டுவிட்டது என்றாலும் கூட பல சட்டங்களில் இன்னும் 14 வயது என்றே இருக்கிறது.

2012க்கான சில முன் சட்டவரைவுகளில் கூட 14 வயது என்றே இருக்கிறது. இந்த சட்டங்களை மீண்டும் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. வயது வரம்பு கண்ணோட்டத்தில் மட்டுமல்லாமல், குழந்தை உரிமைகள்/மனித உரிமைகள் கண்ணோட்டத்திலும் கூட அந்த மறு ஆய்வு தேவைப்படுகிறது. மறு ஆய்வு தேவைப்படுகிற சட்டங்களில் குறிப்பிடத்தக்கவை குழந்தைத் தொழிலாளர்(தடை மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1986, குழந்தைகளின் இலவச, கட்டாய கல்வி உரிமைச் சட்டம் – 2009, கல்வி உரிமைச் சட்ட விதிகள் ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும். இதில் வேடிக்கை என்னவென்றால் சிஆர்சி பிரகடனத்தை 1992ல் இந்திய அரசு அங்கீகரித்தபோது, 32வது சட்ட விதியில் “எந்த அளவிற்கு நிதி ஆதாரங்கள் ஒதுக்கப்படுகின்றனவோ அதைப் பொறுத்தே பொருளாதார, சமூக, பண்பாட்டு உரிமைகளை வளரும் நாடுகளில் முற்போக்கான முறையில் செயல்படுத்த முடியும்” என்ற ஒரு அறிவிப்பை வெளியிட்டது.

(18வயது வரையிலான) குழந்தைகளின் உரிமைகளை அங்கீகரிக்கிற சிஆர்சி பிரகடனம், பொருளாதார சுரண்டலிலிருந்தும், ஆபத்தானதாக விளங்கக்கூடிய வேலைகளில் ஈடுபடுத்துவதிலிருந்தும், குழந்தைகளின் கல்வியில் தலையிடுவதிலிருந்தும் பாதுகாப்பு அளிக்க வலியுறுத்துகிறது. குழந்தைகளின் உடல் நலத்திற்கோ, அவர்களது உடல்சார்ந்த, மனம் சார்ந்த, ஆன்மா சார்ந்த, அறநெறி சார்ந்த, சமூகம் சார்ந்த வளர்ச்சிக்கோ தடையாக இருக்கக்கூடிய அம்சங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கவும் சிஆர்சி வலியுறுத்துகிறது. ஆனால் இவை அமலாக்கப்படுவதை இந்திய அரசு முடக்கிவைத்திருக்கிறது. கடந்த 20ஆண்டுகளில் மத்திய அரசு அரசமைப்பு சாசன 32வது சட்டப் பிரகடனத்தை விலக்கிக்கொண்டிருக்க வேண்டும்; குழந்தைத் தொழிலாளர் சட்டத்தை மறு ஆய்வுக்கு உட்படுத்தியிருக்க வேண்டும்; அனைத்துத் துறைகளிலும் 18வயது வரையிலான குழந்தைத் தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்படுவதை தடுப்பதற்கான சட்டத்தைக் கொண்டுவந்திருக்க வேண்டும். இப்போதாவது மத்திய அரசு அத்தகைய சட்டத்தைக் கொண்டுவர வேண்டும். சிஆர்சி அமலாக்கத்தின் 20 ஆண்டு அனுபவங்கள் பற்றிய சமூக தணிக்கை அறிக்கையானது, உலகிலேயே மிக அதிக அளவில் குழந்தைத் தொழிலாளர்கள் இருக்கிற நாடு இந்தியாதான் என்று தெரிவிக்கிறது. 2001ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி (6 முதல் 14 வயது வரையிலான) குழந்தைத் தொழிலாளர்கள் இந்தியாவில் ஒரு கோடியே 25 லட்சம் பேர் இருக்கிறார்கள் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பள்ளியில் பதிவு செய்யப்படாத, பள்ளிக்கு செல்லா குழந்தைகளை (6–16வயது வரை), கணக்கிட்டால் இந்த எண்ணிக்கை குறைந்தது 5 மடங்காக அதிகரிக்கக்கூடும்.

6. குழந்தைகளின் இலவச கட்டாய கல்வி உரிமைச் சட்டம்(2009) குழந்தைகளைப் பொறுத்தவரையில் ஒரு முக்கியமான நடவடிக்கையாகும். அரசுப் பள்ளிகளிலும் அரசு உதவிபெறும் பள்ளிகளிலும் 6 – 14 வயது பிரிவுகளில் உள்ள குழந்தைகளுக்கான கல்வி உரிமையில் ஓரடி முன்னாள் எடுத்துவைக்கப்பட்டிருக்கிறது. அரசமைப்பு சாசனத்தின் 86வது சட்டத்திருத்தம் 6 முதல் 14 வயது வரையிலான ஒவ்வொரு குழந்தைக்கும் இலவச கட்டாயக் கல்வி உரிமையை உறுதிப்படுத்துகிறது. அதன் அடிப்படையிலேயே இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. ஆனால் மேற்படி சட்டத்திருத்தமும் சரி, கல்வி உரிமைச் சட்டமும் சரி, 0 – 6 வயதுப் பிரிவைச் சேர்ந்த குழந்தைகளின் உரிமைகளை இணைக்க தவறியுள்ளன. 6 வயதுக்கு முன்பே கல்வி கற்றல், பராமரிப்பு, வளர்ச்சி ஆகியவற்றுக்கான உரிமைகள் சேர்க்கப்படவில்லை. அதேபோல் 14 – 18 வயதுப் பிரிவைச் சேர்ந்த குழந்தைகளுக்கான இதே போன்ற உரிமைகளை உறுதிப்படுத்தவும் தவறியுள்ளன. மேலும் சட்டம் செயல்படுத்தப்படுவதையும், அதைக் கண்காணிப்பதையும் அரசுப்பள்ளிகள், உள்ளாட்சிப் பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகள் ஆகியவற்றோடு மட்டுமே இந்தச் சட்டம் வரைமுறைப்படுத்துகிறது. அரசு உதவிபெறாத

(தனியார்) பள்ளிகள் இந்த சட்டவரையறைக்குள் பெருமளவிற்குக் கொண்டுவரப்படவில்லை. தனியார் பள்ளிகளில் 25 சதவீதம் வரையில் நலிவுற்ற பிரிவினர்/பின்தங்கிய பிரிவினரைச் சேர்ந்த குழந்தைகளுக்கு என இட ஒதுக்கீடு வழங்கவேண்டும் என்பது மட்டுமே இதில் சேர்க்கப்பட்டிருக்கிறது. சட்டம் செயல்படத் தொடங்கிய முதல் ஆண்டிலிருந்தே, முதல்வகுப்பிலிருந்தே இந்த இட ஒதுக்கீடு அமலாகும் என்றும் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இந்த சட்டத்தை செயல்படுத்துவதில் கடுமையான குறைபாடுகள் உள்ளன. குறிப்பாக 6 – 14 வயது பிரிவைச் சேர்ந்த குழந்தைகள் கல்வி உரிமைச் சட்ட ஆதாயங்களை பெறச் செய்வதில் பல குறைபாடுகள் உள்ளன. (0–6 வயதுப் பிரிவைச் சேர்ந்த குழந்தைகளுக்கான) தொடக்க நிலை குழந்தை பராமரிப்பு, மேம்பாடு, கல்வி ஆகியவற்றுக்கான அடிப்படை உரிமையை உறுதிப்படுத்தவும், 15 முதல் 18 வயது வரையிலான அனைத்துக் குழந்தைகளுக்கும் அனைத்துப் பள்ளிகளிலும் கல்வி கிடைப்பதை உறுதிப்படுத்தும் வகையில் 21A சட்டப்பிரிவை விரிவுபடுத்தவும், அவர்களுக்கு இலவச, கட்டாய, சமச்சீர் மற்றும் தரமான கல்வியை உறுதிப்படுத்தவும், 21A சட்டப்பிரிவில் உடனடியாக திருத்தங் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டாக வேண்டும்.

7. அரசு எந்த அளவிற்கு குழந்தை உரிமைகளில் அக்கறை காட்டுகிறது என்பதற்கு மத்திய பட்ஜெட் ஒரு அப்பட்டமான எடுத்துக்காட்டு. அதை ஒரு அவலம் என்றுதான் சொல்ல வேண்டும். குழந்தைகளுக்கே முதல் உரிமை அளிக்க வேண்டும், அதிகபட்ச குழந்தை நலன்களைப் பேணவேண்டும் என சிஆர்சி பிரகடனம் கூறுகிறது. மத்திய அரசு தனது பட்ஜெட்டில் வெளிப்படுத்துகிற அக்கறை கவலைக்குரியதாகவே இருக்கிறது. 2010 – 11ம் ஆண்டில் மத்திய பட்ஜெட்டில் குழந்தைகளுக்கான ஒட்டுமொத்த ஒதுக்கீடு என்பது 4.65 சதவீதமாக இருந்தது. 2011 – 12ல் அது வெறும் 5.03சதவீதமாக மட்டுமே அதிகரித்திருக்கிறது. வழக்கம்போல் கல்வித்துறைக்கு அதிகபட்ச ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் குழந்தைகள் மேம்பாடு, சுகாதாரம் போன்றவற்றில் கடந்த ஆண்டில் ஒதுக்கீடு குறைந்திருக்கிறது என்றே சொல்ல வேண்டும். குழந்தை பாதுகாப்பு என்பதற்கு மிகக் குறைந்த நிதி ஏற்பாடுகளே செய்யப்பட்டுள்ளன. குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் 2007ம் ஆண்டிலிருந்து 2009ம் ஆண்டில் 19 சதவீதம் அதிகரித்திருப்பதாக தேசிய குற்றவியல் பதிவு வாரியம்(என்சிஆர்பி) புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இந்த நிலையில் குழந்தைகளின் பாதுகாப்பிற்காக இவ்வளவு குறைந்த நிதி ஒதுக்கப்படுவதை மத்திய நிதி அமைச்சகம் எப்படித்தான் நியாயப்படுத்துகிறதோ. 2011 – 12ல் மத்திய அரசின் பட்ஜெட்டில் குழந்தைகளின் கல்விக்காக என (தொடக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி) என 3.64 சதவீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இது முந்தைய ஆண்டைவிட ஒட்டுமொத்தத்தில் 28.87 சதவீதம் அதிகமாகும். SSA திட்டத்திற்காக என அதிகரிக்கப்பட்ட ஒதுக்கீடு (40சதவீதம்), MDM திட்டத்திற்காக 5,000 மாதிரிப் பள்ளிகள் அமைப்பதற்கான 9.96சதவீத நிதி, நடுநிலைப்பள்ளிகளில் சிறுபான்மையினருக்கு பதின்பருவத்திற்கு பிந்தைய கல்வி உதவி நிதி போன்றவற்றின் காரணமாக இந்த நிதி ஒதுக்கீடு அதிகரித்திருக்கிறது. 2010 – 11ம் ஆண்டில் 0.49 சதவீதமாக இருந்த குழந்தைகள் மருத்துவத்திற்கான நிதி ஒதுக்கீடு, 2011–12ல் 0.43 சதவீதமாகக் குறைந்துவிட்டது. இது எதனால் என்றால், மத்திய சுகாதார மற்றும் குடும்பநலத் துறை அமைச்சகத்திற்குள்ளேயே குழந்தைகளுக்கான நிதி ஒதுக்கீடு 2010 – 11ல் 21.7சதவீதமாக இருந்தது, தற்போதைய பட்ஜெட்டில் 17.56 சதவீதமாக குறைந்ததால்தான் நோய்த்தடுப்பு மருந்துத் திட்டங்களுக்கான நிதி (வழக்கமான நோய்த்தடுப்பு மற்றும் போலியோ சொட்டு மருந்துத் திட்டம்) முந்தைய ஆண்டைவிட 18.07 சதவீதமாகக் குறைந்துவிட்டது. ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டுத் திட்டத்திற்கான (ICDS) நிதி பெருமளவிற்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. அங்கன்வாடி ஊழியர்கள் மற்றும் உதவியாளர்களுக்கான உதவித்தொகையை அதிகரிக்க இது வழிவகுத்துள்ளது. ஆனால் இதற்கான மத்திய பட்ஜெட் நிதி ஒதுக்கீடு வெகுவாகக் குறைந்திருக்கிறது.

8. இந்த அறிக்கையை நாம் 3 முக்கிய பிரச்சனைகளுடன் நிறைவு செய்யலாம். குழந்தை உரிமைகள் பிரகடனத்தை செயல்படுத்துவதில் இந்திய அரசு உண்மையிலேயே அக்கறை காட்டுகிறது என்றால், தனது அரசமைப்பு சாசன சட்டங்களைச் செயல்படுத்துவதில் உண்மையான

அக்கறை இருக்கிறதென்றால், இந்தப் பிரச்சனைகளை மத்திய அரசு பரிசீலிக்க வேண்டும், செயல்பட வேண்டும்.

அ) மக்களின் உணவுப்பாதுகாப்புக்கான புள்ளி விவரங்களில், அதிகரித்துவரும் வறுமை நிலை பிரதிபலிக்க வேண்டும். உணவுப் பாதுகாப்பின்மை அதிகரிப்பதற்கும், மக்களின் ஊட்டச்சத்தின்மை அதிகரிப்பதற்கும் மிக முக்கியமான காரணம் விவசாய நெருக்கடிதான்.

பொது விநியோகங்களை திட்டமிட்ட முறையில் சீர்குலைக்கப்பட்டது இதில் மேலும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியிருக்கிறது. 1996 முதல், இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொது விநியோகம் கொண்டுவரப்பட்டது. அதன் அடிப்படையில் பொது விநியோக முறை பலவீனப்படுத்தப்பட்டது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உணவுக்கான மானியம் என்பது வெறும் 1.5 சதவீதம்தான். இருந்தபோதிலும், அந்த மானியமே கூட மிக அதிகம் என்பதாக ஒரு வாதம் முன்வைக்கப்பட்டது. அதன் மூலம் "வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்கள்" என்ற பெயரில் குறிப்பிட்ட பகுதியினருக்கு மட்டுமாக இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. அதன் மூலம் பெரும்பாலான குடும்பங்கள் மலிவான விலையில் உணவுதானியங்களை வாங்க முடியாது என்ற நிலைமை ஏற்படுத்தப்பட்டது. அதே நேரத்தில், விநியோகிக்கப்படாத கோதுமையும் அரிசியும் மிகப்பெரும் அளவிற்கு (23 கோடி டன்னுக்கும் அதிகமாக) அரசின் கிடங்குகளில் தேங்கிக்கிடக்கும் நிலை ஏற்பட்டது. அதன் விளைவாக மக்களிடையே ஊட்டச்சத்துக் குறைவு ஏற்பட்டிருக்கிறது என்பது வெளிப்படை. உலக அளவில் 119 நாடுகளில் பட்டினி நிலை குறித்த ஒரு ஆய்வு நடத்தப்பட்டது. அதில் இந்தியா 94வது இடத்தில் இருக்கிறது. 2005 – 06ஆம் ஆண்டின் தேசிய குடும்ப சுகாதார ஆய்வு அறிக்கையின்படி (NFHS–3) நாட்டின் 56 சதவீத பெண்கள் ரத்தசோகையால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். புதிதாகப் பிறக்கும் குழந்தைகளில் 30 சதவிகிதம் பிறப்பிலேயே எடைக் குறைவாக இருக்கிறது. மற்ற குழந்தைகளில் 47 சதவீதத்தினர் குறைந்த எடையுடன் உள்ளனர். கிராமப்புறக் குழந்தைகளில் (6 மாதம் முதல் 35 மாதங்கள் வரை) 81சதவீதத்தினர் ரத்த சோகையுடனும், 41 சதவீதத்தினர் வளர்ச்சிக் குறைவாகவும் உள்ளனர். 49 சதவீதத்தினர் குறைந்த எடையுடன் உள்ளனர். 20 சதவீதத்தினர் உடல் மெலிவு பிரச்சனையால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவை அனைத்தும் எந்த அளவிற்கு ஊட்டச்சத்து குறைவு என்பது தொடர்ச்சியாகவும் கடுமையாகவும் இருக்கிறது என்பதைக் காட்டுகின்றன.

ஆ) இன்றைய உலகமய யுகத்தில் இந்தியாவில் வேலை வாய்ப்பு உருவாக்கம் என்பது தேக்கமடைந்திருக்கிறது, அல்லது சரிவடைந்திருக்கிறது என்றுகூட சொல்லலாம். இதனால் 'வேலையிழப்பு' வளர்ச்சி என்பது மட்டுமல்லாமல், "வேலையின்மை வளர்ச்சி" என்பதும் ஏற்பட்டிருக்கிறது. இதன் விளைவாக ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் வேலை தேடி நெடுந்தொலைவுகளுக்கு இடம் பெயர்கிறார்கள். இது குழந்தைகளின் உரிமைகளில் நாசகரமான பாதிப்புகளையே ஏற்படுத்துகிறது. இந்தியாவில், வயதுவந்தவர்களுக்கு வேலையில்லை அல்லது சரியான வேலை கிடைக்கவில்லை என்ற நிலைமையின் நேரடி வெளிப்பாடாகத்தான் குழந்தைத் தொழிலாளர் முறை என்பதும் நடைமுறையில் இருக்கிறது. வருவாய்க்கான ஒரு மாற்று ஏற்பாடாக (சில நேரங்களில் இதுவே பிரதான ஏற்பாடாக) இருக்கிறது. தற்போதைய வேலையிழப்பு வளர்ச்சி, வேலையின்மை வளர்ச்சி என்ற பின்னணியில் குழந்தைத் தொழிலாளர் முறை என்பதும் அதிகரிக்கவே செய்யும். ஆனால் இது விவசாயம் போன்ற வழக்கமான துறைகளிலிருந்து மாறி புதிய வடிவங்களில் வெளிப்படக்கூடும். நெருக்கடி முற்ற முற்ற, வேகமாக நகரமயமாகிவரும் பகுதிகளில் குழந்தைத் தொழிலாளர் முறை வெவ்வேறு வடிவங்களில் வெளிப்படக்கூடும். சொல்லப்போனால் முறைசாரா தொழில்கள் அதிகரித்து வருவது என்பது குழந்தைத் தொழிலாளர் முறைக்கான விளைநிலமாக இருக்கிறது. எண்ணற்ற தொழில்களில் குழந்தைகள் ஈடுபடுத்தப்படுகிறார்கள். மேலும் முறைசாரா வேலைகள் என்பதை ஒப்புக்கொள்ளும் போக்கு அதிகரிக்குமானால், தற்போது அதுதான் நடந்து வருகிறது, குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிரான குரல்களும் பெரிய அளவிற்கு ஒலிக்காது. பண வீக்கம் (விலைவாசி) அதிகரிக்க அதிகரிக்க, பெரியவர்களுக்கான வேலை வாய்ப்புகள் கிடைப்பது அரிதாக அரிதாக பெற்றோர் தங்கள் குழந்தைகளை வேலைக்குச் செல்லுமாறு கட்டாயப்படுத்துவதுதான் நடக்கும்.

இ) குழந்தைகளின் இயற்கைச் சூழல் உரிமைகளை அரசும் நீதிமன்றங்களும் இன்னும் அங்கீகரிக்காமலேயே இருக்கின்றன. சுற்றுச்சூழல் சட்டங்கள், வனச் சட்டங்கள், நீர் சட்டங்கள், கடல் மற்றும் கடலோரப் பகுதிகளுக்கான சட்டங்கள், சுரங்கச் சட்டங்கள், குடியிருப்பு மற்றும் மறுகுடியமர்த்தும் சட்டங்கள் போன்ற சட்டங்களில் ஏற்படுத்தப்படுகிற கொள்கை மாற்றங்களிலிருந்து இந்த நிலைமை ஏற்படுகிறது. நிலம் கையகப்படுத்துதல், பெரும் தொழில் நிறுவனங்கள், உள்கட்டுமான திட்டங்கள், பாதுகாப்பு திட்டங்கள், மின் உற்பத்தித் திட்டங்கள் போன்றவற்றிற்காக நிலம் ஒதுக்கீடு செய்தல் ஆகிய நடவடிக்கைகள் கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையிலும் வாழ்வாதாரங்களிலும் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளன. காலங்காலமாக இருந்துவந்த நடைமுறைகளையும், கூட்டு உரிமைகளையும் பறித்துள்ளன. இதன் தாக்கத்தில் பெருமளவுக்கு மக்கள் தங்களது இடங்களிலிருந்து வெளியேறி மற்ற இடங்களுக்கு செல்வது நடக்கிறது. பெரும்பாலும், விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்ட மக்களும் அவர்களது குழந்தைகளுமே இவ்வாறு இடம்பெயர்கிற நிலைமை ஏற்படுகிறது. அவர்களது சொந்த இடங்களும் வாழ்வாதாரங்களும் நீர்நிலைகளும் கால்நடைகளும் வாழ்க்கை வழிமுறைகளும் அழிக்கப்படுகின்றன. வாழ்விடத்திலிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றப்படுவதால் இந்தியாவில் லட்சக்கணக்கான குழந்தைகள் வீடற்றவர்களாக, பாதுகாக்கப்பட்ட குடிநீர்கூட கிடைக்காதவர்களாக, பள்ளி செல்லும் வாய்ப்பற்றவர்களாக, நண்பர்களை இழந்தவர்களாக, நாகரீக வாழ்க்கைக்கான வாய்ப்புகள் மறுக்கப்பட்டவர்களாக நிற்கிறார்கள். இடம் பெயர்கிற குழந்தைகள் அதிகமான வன்முறைகளுக்கும், கொடூரமான பசி, பட்டினிக்கும், ஊட்டச்சத்தின்மைக்கும் இலக்காகிறார்கள்.

இந்திய அரசும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசியல் கட்சிகளின் தலைவர்களும் இந்த இயக்கத்திற்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்றும், பின்வரும் கோரிக்கைகளை ஏற்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறோம்:

1. குழந்தை உரிமைகள் உடன்படிக்கையின் 32வது விதி தொடர்பான ஒவ்வொரு அறிவிப்பையும் இந்திய அரசு உடனடியாக விலக்கிக்கொள்ள வேண்டும்; அதன் மூலம் குழந்தை உரிமைகள் உடன்பாட்டை முழுமையாகவும் முற்றிலுமாகவும் அங்கீகரிக்க வேண்டும்.

2. குழந்தைகளுக்கான வயது வரம்பு தொடர்பான உடன்பாட்டை இந்திய அரசு 1992ல் அங்கீகரித்திருக்கிறது. அதற்கேற்ப, 18 வயதுக்கு கீழ்ப்பட்ட ஒருவர் குழந்தையே என அறிவிக்கும் வகையில் அரசமைப்பு சாசனத்தில் உரிய திருத்தத்தை இந்திய அரசு செய்ய வேண்டும்.

3. தற்போதைய குழந்தைத் தொழிலாளர் (தடுப்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் – 1986ஐ இந்திய அரசு விலக்கிக்கொள்ள வேண்டும்; 18 வயது வரையிலான எல்லாக் குழந்தைகளையும் எந்தவொரு துறையிலும் குழந்தைத் தொழிலாளர்களாக நியமிக்க தடை விதிக்கும் புதிய சட்டத்தை நிறைவேற்ற வேண்டும்.

4. 1974ம் ஆண்டின் தேசிய குழந்தைகள் கொள்கையை இந்திய அரசு மறு ஆய்வு செய்ய வேண்டும்; இனிமேலும் தாமதமின்றி குழந்தைகளுக்கான ஒரு புதிய விரிவான கொள்கையை உருவாக்க வேண்டும்.

5. 2009ம் ஆண்டின் குழந்தைகளுக்கான இலவச, கட்டாய கல்வி உரிமைச் சட்டத்தை, 18 வயதுக்கு கீழ் உள்ள அனைவரையும் இணைக்கும் வகையில், விரிவுபடுத்துவதற்கான உடனடி நடவடிக்கைகளை இந்திய அரசு மேற்கொள்ள வேண்டும்.

6. வேலை செய்யும் நிலைக்கு தள்ளப்பட்ட குழந்தைகளின் குரலுக்கு இந்திய அரசு செவிமடுக்க வேண்டும், பெரியவர்கள் அனைவருக்கும் வேலைவாய்ப்பு அளித்தல், மரியாதையான ஊதியம் கிடைக்கச் செய்தல், வேலை செய்யும் நிலைக்குக் கட்டாயப்படுத்தப்பட்ட குழந்தைகளின் குடும்பங்களுக்கான சிறப்பு நடவடிக்கைகள் உள்ளிட்ட அந்தக் குழந்தைகளின் கோரிக்கைகளை அரசு நிறைவேற்ற வேண்டும்.

7. குழந்தைகளின் இயற்கைச் சூழல் உரிமைகளை இந்திய அரசும் சம்பந்தப்பட்ட அனைவரும் அங்கீகரிக்க வேண்டும், ரசாயன உரங்கள், தொழிற்சாலை மாசு, பல்லுயிர் அழிப்பு, நீர் வறட்சி, இதர பருவநிலை மாற்றம் தொடர்பான பாதிப்புகள் போன்ற அனைத்துவிதமான இயற்கை சூழல் மற்றும் சுற்றுச்சூழல் கேடுகளிலிருந்து குழந்தைகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

# பெண் கைதிகளின் குழந்தைளுக்கும் சிறை வாழ்க்கை

சென்ற இதழ் – 60யின் தொடர்ச்சி

### 7. அரசு கொள்கை வழிகாட்டு விதிகளின் வழிகாட்டுதல்கள்

அரசு தனது கொள்கை வகுக்கும் நிகழ்வுப் போக்கில், ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களது உடல் நலன் மற்றும் உடல் வலிமை ஆகியவற்றைப் பாதுகாக்கத் தக்க வகையில் வழிகாட்டுதல் வழங்க வேண்டும் என அரசியல் சட்ட விதி 39 (e) சொல்கிறது. இளம் குழந்தைகள் வஞ்சிக்கப்படக் கூடாது, குடிமக்கள் பொருளாதாரத் தேவைகள் காரணமாக தனது வயதுக்கும் உடல் வலிமைக்கும் பொருந்ததாதவாறு கூடுதலாக உழைக்கும் நிர்ப்பந்தம் இருக்கக்கூடாது. குழந்தைகள் ஆரோக்கியமான சூழலில் வளர்வதற்குரிய வாய்ப்புகளும், வசதிகளும் கிடைக்கப்பெறும் நிலையைப் பாதுகாப்பதாக கொள்கை வகுக்கப்பட அரசு வழிகாட்ட வேண்டுமென அரசியல் சட்ட விதி 39(f) அரசைச் கோருகிறது. அதோடு குழந்தை சுதந்திரமாக இருப்பதோடு அதன் மாண்பும் பாதுகாக்கப்பட வேண்டும். குழந்தைகளோடு இளைய தலைமுறையினரும் சுரண்டலிலிருந்து பாதுகாக்ககப்படுவதோடு, உளவியல் ரீதியாக, பொருளியல் ரீதியாக புறக்கணிக்கப்படுவது கூடாது எல்லாக்குழந்தைகளுக்கும், அவர்களுக்கு 14 வயது [21]நிறைவடையும் வரையில் இலவச, கட்டாயக் கல்வி அளிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென அரசியல் சட்ட விதி 45 அரசுக்குக் கட்டளையிடுகிறது.

### 8. கல்விக்கான உரிமை அடிப்படை உரிமையே

ஆரம்பக் கல்வியை அனைவருக்கும் இலவசமாக, கட்டாயமாக அளிக்க வேண்டியதும் உரிய சட்டங்கள், திட்டங்கள்[22] மூலம் உயர் நிலைக்கல்வி மற்றும் பல்கலைகழகக் கல்வியை அளிக்க வேண்டியதும் அரசின் கடமை அரசியல் சட்ட விதி 21–ல் விளக்கப்படுகிறது உயிர்வாழும் உரிமை தனிப்பட்ட மனிதனின் மாண்பு ஆகியவை, கல்வி பெறுவதற்கான உரிமை என்பதோடு இணைந்ததாக இல்லாவிட்டால் அவை எந்த விதத்திலும் பயனற்றவை ஆகிவிடும் குடிமக்கள் அனைவருக்கும் எல்லா மட்டங்களிலும் அல்லது நிலைகளிலும் கல்விக்கான வாய்ப்பு வசதிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசின் பொறுப்பு. எனவே கல்விக்கான உரிமை என்பது அரசியல் சட்டப் பிரிவு 3ல் மிகச் சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளோடு தொடர்ந்து வருவதாகும். [23] 14 வயது வரை கல்வி பெறுவது அடிப்படை உரிமையாக[24] இருக்க வேண்டும். அதேபோல உடல் நலன் பாதுகாக்கப்படுவதும். பாதுகாக்கப்பட்ட குடிநீர் அளிக்கப்படுவதும், உயிர் வாழ்வதற்கான பொருளார்ந்த உரிமை ஆகியவையும் கூட அடிப்படை உரிமைகளாகப் பார்க்கப்பட வேண்டும். ஒரு குழந்தை கூட மேற்கண்ட அடிப்படை உரிமைகளைத் துய்ப்பதற்கு உரிமை [25] பெற்றுள்ளது. இடை நிலைக் கல்வி பெறுவதும் கூட ஒரு அடிப்படை உரிமையாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி கட்டாய கல்வி ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட வேண்டியது அரசின் கடமையாகும். சட்டப்படி கல்வி உரிமை என்பது ஒவ்வொரு குழந்தைக்கும் அடிப்படை உரிமையாகும். [26] ஒவ்வொரு குடிமகனுக்கும் இந்தச் சட்டப்படி கல்வி பெற உரிமையுள்ளது. அரசு இந்தச் சட்டப்படி ஒவ்வொரு குடிமகனுக்கும் கல்வி பெறுவதற்காக பல்வேறு கல்வி நிறுவனங்களை விரிவாக உருவாக்க வேண்டும். அரசு நடத்தும் அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்கள்[27] மூலம் தரமான கல்வி வழங்கப்பட வேண்டும்.

### 9. தாய் கைதிகள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள்

தாயோடு குழந்தை வசிப்பதற்கு ஏற்ற இடம் சிறைச்சாலை அல்ல. ஒரு குழந்தைக்கு மிகவும் அடிப்படை அவசியமான குடும்பச் சூழல் எப்போதுமே சிறைக்குள் இருக்காது. ஒரு பெண் கைதி சிறைக்குள் தனது அன்றாடத் தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்கே பல பிரச்சினைகளைச் சந்திக்க நேர்கிறது. பெண் கைதி தன் குழந்தைகளைத் தன்னோடு வைத்துப்பராமரிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டாலோ, அவளது பிரச்சினைகள் பன் மடங்காகப் பெருகி விடுகிறது. நமது சிறைகளில் கைதிகள் தம்மோடு குழந்தைகளை வைத்திருக்க போதுமான வசதிகள் இல்லை என்பதோடு சிறைகளில் வளரும் குழந்தைகளால் உருவாகும் பிரச்சினைகளைக் கையாள்வதற்கான பயிற்சி பெற்ற பணியாளர்கள் எவரும் இல்லை. இதன் விளைவாக குழந்தைகளைப் பராமரிப்பது தொடர்பான பொறுப்புகள் அனைத்தும் அவர்களது தாயார் தலையில் சுமத்தப்பட்டுள்ளது. மோசமான பகைப்போக்கு மிகுந்த சூழல் நிலவும் சிறைக்கூடங்களில் தமக்குக் கிடைக்கும் பற்றாக்குறையான ஆதாரங்களை வைத்து தமது குழந்தைகளை பராமரிக்க வேண்டிய தாய் கைதிகளுக்கு இயல்பாகவே பல பெரும் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. குழந்தைகள் சிறைக்குள் இருக்க நேர்வதால் அவர்களது உடலியல் வளர்ச்சி தடைப்படுகிறது. சிறைச்சூழலும் இக்குழந்தைகளின் வளர்ச்சிக்கு மற்றொரு இடையூறாக வுள்ளது. சிறைக்குள் அனைவருக்கும் ஒரே மாதிரியாக

அளிக்கப்படும் தரமற்ற உணவு மட்டுமல்லாது சத்துப் பொருட்கள், கல்வி உடல் நலன் பெறுவதற்கான மருத்துவ வசதியும் பற்றாக் குறையாக இருப்பதால் இக்குழந்தைகளின் உடல் வளர்ச்சி மற்றும் இதர வளர்ச்சிப் போக்கு ஆகியவை இயல்பானவையாக அன்றி இறுகிப் போகின்றன. பெண் கைதிகள் இருப்பதற்கேற்ற குறிப்பாக பச்சிளம் குழந்தைகளைத் தம்மோடு வைத்துள்ள தாய்க்கைதிகள் வசிப்பதற்கேற்ற இடவசதி சிறையில் இல்லை.[28]

## 10. உச்சநீதி மன்றம் வகுத்துள்ள வழிகாட்டு விதிகள்:

இந்தியச் சிறைகளில் பெண்கள் உள்ள நிலை குறித்தப் பரிசீலனை செய்த உச்ச நீதி மன்றம் கீழ்க்கண்ட வழிகாட்டுதல் வகுத்து அறிவித்துள்ளது.

சிறைக்குள் தன் தாயாருடன் இருக்கும் ஒரு குழந்தை ஒரு விசாரணைக் கைதியைப் போலவோ, அல்லது தண்டனைக் கைதியைப் போலவோ நடத்தப்படக் கூடாது இது போன்ற ஒரு குழந்தை தனக்குத் தேவையான உணவு, உறைவிடம், மருத்துவகவனிப்பு, உடை, கல்வி, மற்றும் பொழுது போக்கு வசதிகளைப் பெறுவதற்கு உரிமை உண்டு.

### கருவுற்ற காலத்தில்

அ. கருவுற்ற பெண் ஒருவரைச் சிறைக்கு அனுப்புவதற்கு முன்பாக, சம்மந்தப்பட்ட நிர்வாகத்தினர் குறிப்பிட்ட சிறையில் மகப்பேறுக்கான பேறு காலத்திற்கு முன்பும் பின்பும் தாய் மற்றும் குழந்தையை வைத்துப் பராமரிப்பதற்காக குறைந்தபட்ச வசதிகளேனும் உள்ளதா என்பதை உறுதி செய்வது கட்டாயமாகும்.

ஆ. பெண் கைதி ஒருவர் சிறைக்குள் அனுமதிக்கப்படும் போது அல்லது அதற்குப் பின்னரும் கூட கருவுற்றிருப்பதாக அய்யம் ஏற்படுமானால், பெண் மருத்துவ அலுவலர் அதுகுறித்து சிறைக் கண்காணிப்பு அலுவலருக்குத் தகவல் அளிக்க வேண்டும். எவ்வளவு இயலுமோ அவ்வளவு விரைவாக, குறிப்பிட்ட பெண் கைதியை அரசினர் மாவட்ட மருத்துவமனையின் பெண்கள் பகுதிக்கு அழைத்துச் சென்று அவளது உடல் நலம், கருவின் நிலை, பேறுகால அளவு, உத்தேசமான மகப்பேறு நாள் ஆகியவற்றை ஆய்வு செய்ய வேண்டும். தேவையான குறிப்பிட்ட அம்சங்களை ஆய்வு செய்தபின்னர் குறிப்பிட்ட பெண் கைதியின் சிறைக்குள் கொண்டுவரப்பட்ட நாள், தண்டனைக்காலம், விடுதலையாகும் நாள் பேறுகால அளவு, உத்தேசமான மகப்பேறு நாள் போன்றவை அடங்கிய அறிக்கை ஒன்றை சிறைத்துறைத் தலைமை ஆய்வாளர் அவர்களுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

இ. பெண் கைதிகளுக்கான மகப் பேறு தொடர்பான ஆய்வுகள் அனைத்தையும் அரசினர் மாவட்ட மருத்துவமனையில் மேற்கொள்ளலாம். மருத்துவ ஆய்வு அறிக்கையின் படி குறிப்பிட்ட பெண் கைதிக்கு மகப்பேறுக்கு முன்பும் பின்பும் முறையான மருத்துவ சிகிச்சை வசதி இருக்க வேண்டும்.

### சிறைக்குள் நிகழும் மகப்பேறு

அ. தனது மகப்பேறு நிகழ்வை சிறைக்கு வெளியே வைத்துக் கொள்ள விரும்பும் கருவுற்ற பெண் கைதி ஒருவருக்கு எவ்வகையில் சாத்தியமோ அவ்வகையில் அவரே தனக்குப் பொருத்தமான அல்லது தனது விருப்பத்திற்கேற்பத் தேர்வு செய்யுமாறு தற்காலிக விடுதலை அல்லது விடுப்பு (அல்லது பெண் கைதி வளர் இளம் பருவத்தினராக இருந்தாலோ அல்லது தற்செயல் குற்றவாளியாகவோ இருக்கும் நிகழ்வுகளில் அவரது தண்டனையை இடை நிறுத்தம் செய்வது) அளிக்கப்பட வேண்டும். பாதுகாப்பு தொடர்பிலான உயர் அளவு ஆபத்து நிறைந்த அல்லது அதற்குச் சமமான கடுமையான நிலைமைகள் இருக்கும் கைதிகளுக்கே இவற்றிலிருந்து விலக்கு அளிக்கலாம்.

ஆ. சிறைக்குள் மகப்பேறு நிகழ்வுகள் ஏற்படும் காலத்தில் உள்ளூர் பிறப்பு பதிவு அலுவலகத்தில் அவை பதிவு செய்யப்பட வேண்டும். ஆனால் குறிப்பிட்ட குழந்தையின் பிறப்புச் சான்றிதழ் அளிக்கும் போது அக்குழந்தை சிறைக்குள் பிறந்ததாகக் குறிப்பிடக் கூடாது. குறிப்பிட்ட இடத்தின் முகவரியை மட்டுமே பிறப்புச் சான்றிதழில் குறிப்பிடப்பட வேண்டும்.

இ. சூழ்நிலை எவ்வளவு காலம் அனுமதிக்குமோ அவ்வளவு காலம் வரையில் குழந்தைக்கும் பெயர் சூட்டும் சடங்கினை ஒத்திவைத்துக் கொள்ளலாம்.

### பெண் கைதிகள் மற்றும் அவர்களது குழந்தைகள்

அ. பெண் கைதிகள் தமது குழந்தைகளுக்கு ஆறு வயது ஆகும் வரையில் அவர்களைத் தம்மோடு வைத்திருக்க அனுமதிக்கலாம்.

ஆ. எந்தவொரு பெண் கைதியும் தனது குழந்தைக்கு ஆறுவயது நிறைவடைந்தபின்னர் அதனைத் தன்னோடு வைத்திருக்க அனுமதிக்கக் கூடாது. குழந்தைக்கு ஆறுவயது எட்டும் வேளையில் பெண் கைதி தனது குழந்தையை தனது

விருப்பத்திற்கேற்ப தனக்கு பதிலாக மற்றொருவரிடமோ அல்லது சமூக நலத்துறை மூலம் நடத்தப் படும் நிறுவனத்திலோ ஒப்படைக்கலாம். எவ்வளவு சாத்தியமோ அந்த அளவுக்கு குறிப்பிட்ட குழந்தையை சிறை அமைத்திருக்கும் நகருக்கு வெளியே உள்ள நிறுவனங்களுக்கு அனுப்பப்படுவதைத் தவிர்க்க வேண்டும். இதன் மூலம் தொலைவு காரணமாக தாய்க்கும் சேய்க்கும் உருவாகும் கடுமையான துன்பங்கள் இல்லாது போகும்.

இ. பெண் கைதிகளின் குழந்தைகளை அவர்களது தாயார் விடுதலையாகும் காலம் வரையிலோ அல்லது அது தனது சொந்த வாழ்வுக்கான வருவாய் ஈட்டும் காலம் வரையிலோ அரசு அக்குழந்தையைத் தனது பாதுகாப்பில் வைத்திருக்கலாம்.

ஈ சமூக நலத்துறையின் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள குழந்தை சிறையிலிருக்கும் தனது தாயாரை குறைந்தது வாரம் ஒரு முறையாவது சந்திக்க அனுமதிக்க வேண்டும். சிறைத்துறைக் கண்காணிப்பாளர் உறுதி செய்யும் நாளில் குறிப்பிட்ட குழந்தை சிறைக்குக் கொண்டு செல்லப்பட்டு தனது தாயாரைச் சந்திப்பதை சமூக நலத்துறையின் இயக்குனர் உறுதியாக அமலாக்க வேண்டும்.

உ. குழந்தையின் தாயான பெண் கைதி திடீரென மரணம் அடைந்து விட்டால், சிறைக் கண்காணிப்பாளர் குறிப்பிட்ட மாவட்ட நீதிபதியிடம் அது பற்றி அறிக்கை அளிக்க வேண்டும் மாவட்ட நீதிபதி அக்குழந்தையின் பராமரிப்புக்கு உரிய ஏற்பாடு செய்தல் வேண்டும். குறிப்பிட்ட குழந்தையின் உறவினர்கள் அக்குழந்தையைப் பேணிக் காப்பதற்கு மறுத்துவிடும் நிலையில் மாவட்ட நீதிபதி அக்குழந்தையை அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலோ அல்லது மாநில அரசின் சமூக நலத்துறை நடத்தும் இல்லத்திலோ அல்லது பொறுப்பான ஒருவரிடமோ அக்குழந்தையின் பராமரிப்புப் பொறுப்பை ஒப்படைக்க வேண்டும்.

**உணவு, உடை, மருத்துவ வசதி மற்றும் உறைவிடம்**

அ. சிறையில் உள்ள குழந்தைக்கு உள்ளூர் தட்ப வெப்ப நிலைகளின் தேவைக்கேற்ப பொருத்தமான உடைகள் அளிக்கப்பட வேண்டும். இது குறித்த தக்க உத்தரவுகளை குறிப்பிட்ட மாநில அரசோ அல்லது யூனியன் பிரதேச அரசோ பிறப்பிக்க வேண்டும்.

ஆ. வளரும் குழந்தைகளுக்கேற்ப கலோரி தேவைகள் அடிப்படையிலான உணவு வழங்கல் அளவீடுகளைக் குறிப்பிட்ட மாநில அரசு / யூனியன் பிரதேச அரசு கணக்கிட்டு அளிக்க வேண்டும்.

இ. சிறைக்குள் குறிப்பிட்ட காலத்திற்கு வசிக்க நேரிடும் குழந்தைகளின் சத்துத் தேவைகளுக்கேற்ற பொருட்கள் அடங்கிய தனியான உணவு வழங்கும் பொருட்டு எல்லாச் சிறைகளிலும் நிரந்தரமான அளவீடுகள் கணக்கிட்டு அளிக்கப்பட வேண்டும்.

ஈ தம்மோடு இருக்கும் குழந்தைகளுக்கு உணவூட்டுவதற்கு வசதியாக பெண் கைதிகளுக்கு பொருத்தமான உலோகம் மற்றும் அளவுகளால் ஆன பாத்திரங்கள் அளிக்க வேண்டும்.

உ. குழந்தைகளுக்கு அளிக்கப்படும் குடிநீர் தரமான தாக இருக்க வேண்டும். அதனை குறிப்பிட்ட காலமுறையில் அவ்வப்போது சோதனை செய்தல் வேண்டும்.

ஊ. குழந்தைகளின் உடல் வளர்ச்சி மற்றும் தேவையான தடுப்பூசி போடுவது ஆகியவற்றுக்காக பெண் மருத்துவ அலுவலரால் அவர்கள் தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு குழந்தைகளின் தடுப்பூசி சம்மந்தமான எல்லா தகவல்களும் பதிவேடுகளில் பதிவு செய்யப்பட வேண்டும். மருத்துவ அலுவலரின் பரிந்துரையின் பேரில் கூடுதல் உடை, உணவு போன்றவற்றை அளிக்கலாம்.

எ. பெண் கைதி நோயுறும் காலத்தில், அவளால் பராமரிக்கப்பட்டு வந்த அவளது குழந்தையைப் பராமரிப்பதற்கான தக்க ஏற்பாடுகளைச் சிறை அலுவலர்கள் செய்தல் வேண்டும்.

ஏ. குழந்தையும் தாயும் உறங்குவதற்குப் பொருத்தமான, தூய்மையான போதுமான இடவசதி அளித்தல் வேண்டும்.

ஐ. சிறையில் வசிக்கும் குழந்தையைப் பார்க்க பார்வையாளர்கள் அனுமதிக்கப்பட வேண்டும்.

ஒ. சில குறிப்பான தனித்தன்மை வாய்ந்த வழக்குகளில், சூழ்நிலை காரணமாகத் தேவை ஏற்படும் போது, நீதி மன்றத்தின் ஆணையில்லாத போதிலும் கூட ஆறு வயதுக்குட்பட்ட குழந்தையை

சிறைக்குள் அனுமதிப்பதற்கான அதிகாரம் சிறைக் கண்காணிப்பாளருக்கு அளிக்கப்பட வேண்டும்.

## பெண் கைதிகளின் குழந்தைகளுக்கான கல்வி மற்றும் பொழுதுபோக்கு ஏற்பாடுகள்

அ. தன் தாயாரோடு சிறையில் வசிக்கும் குழந்தைக்கு முறையான கல்வி மற்றும் பொழுது போக்கு வசதிகள் அளிக்க வேண்டும். பெண் கைதி சிறையில் பணியில் இருக்கும் காலங்களில் அக்குழந்தை செவிலியர் அல்லது பெண் காவலரின் பாதுகாப்பில் இருக்குமாறு குழந்தைகள் காப்பகத்தில் விடப்பட வேண்டும். இந்த வசதிகளை சிறைக்காவலர் மற்றும் பிற சிறை அலுவலர்களின் குழந்தைகளுக்கும் நீட்டிக்காலம்.

ஆ. பெண் கைதிகள் தம்மோடு குழந்தைகளை வைத்துப் பராமரிக்கும் நிலையில் உள்ள சிறை அதனோடு இணைந்ததாக குழந்தைகள் காப்பகம் ஒன்றும் மழலையர் காப்பகம் ஒன்றும் அமைக்கப்பட வேண்டும். மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகள் காப்பகத்திலும் மூன்று முதல் ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகள் மழலையர் பள்ளியிலும் சேர்த்து பராமரிக்கப்பட வேண்டும். இத்தகைய காப்பகம் மற்றும் மழலையர் பள்ளிகள் இரண்டுமே இயன்ற அளவு சிறைக்கு வெளியே இருக்குமாறு சிறை அலுவலர்கள் இடங்களைத் தேர்வு செய்ய வேண்டும்.

இ. பல மாநிலங்களில் போதிய வசதிகள் இல்லாத நிலையில் சின்னஞ்சிறார்கள் கிளைச்சிறைகளில் இருக்கின்றனர். குழந்தைகளின் உயிரியல், உளவியல் மற்றும் சமூக வளர்ச்சிக்கேற்ப முறையான வசதி வாய்ப்புகள் உறுதி செய்யப்படாத நிலையில், இத்தகைய கிளைச்சிறைகளில் குழந்தைகளை உடன் கொண்ட பெண் கைதிகளை வைத்திருக்கக் கூடாது.

ஈ. குழந்தைகளை தண்டனை விதிக்கப்பட்ட பெண் கைதிகள், விசாரணைக்கைதிகள். மிகக்கொடுமையான குற்றம் உள்ளிட்ட எல்லா வகையான குற்றங்களையும் செய்துள்ள கொடுங்குற்றவாளிகள் ஆகியோர் நிறைந்த, எண்ணிக்கை உயர்ந்து இடநெருக்கடி மிகுந்த சிறை அறைகளில் வைத்து பராமரிப்பது குழந்தைகள் தமது தனித்தன்மை மற்றும் வளர்ச்சியைப் பெறுவதற்கு மிகக் கேடு விளைவிக்கும். எனவே, குழந்தைகள் இத்தகைய கொடுங்குற்றச்சூழலிருந்து தனியே பிரிக்கப்படுவதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

**உணவு :**

மருத்துவ கண்காணிப்பில் உள்ள பச்சிளங் குழந்தைகள் மற்றும் குழந்தைகளுக்கு அளிக்கப்பட வேண்டிய உணவு முறை குறித்து டாக்டர்.ஏ.எம்.துவாரகதாஸ் மோதிவாலா அவர்களால் வகுத்தளிக்கப்பட்ட அளவீடு அறிக்கை திரு.சஞ்சய் பாரிக் அவர்களால் சமர்பிக்கப்பட்டது. இந்த ஆவணம் குழந்தைகள் தேவைக்கேற்ப பகல் மட்டுமல்லாது இரவிலும் தாய்ப்பாலூட்டுவது உள்ளிட்ட பல்வேறு பரிந்துரைகளை வழங்கியுள்ளது. சில காரணங்களால் தாயால் தனது குழந்தைக்கு தாய்ப்பால் ஊட்ட இயலாமல் போகுமானால், தண்ணீர் கலக்காத புத்தம் புது பாலைக் குழந்தைக்கு கொடுக்கலாம். இந்த ஆவணம் "பாலில் தண்ணீர் கலப்பதை பரிந்துரை செய்யவில்லை. குறிப்பாக மிக வறிய நிலையில் உள்ளவர்கள் கல்வியறிவற்ற புறக்கணிக்கப்பட்ட நிலையில் வசிக்கின்றனர். அவர்களது வரிய வாழ்க்கைச்சூழல் மற்றும் சுகாதாரமற்ற உணவு பழக்கங்கள் காரணமாக அவர்களது குழந்தைகள் குடலியல் கோளாறுகள் ஏற்படும் வாய்ப்பு, சத்துக்குறைபாடுகள் போன்றவற்றால் ஏற்கனவே பாதிக்கப்பட்ட நிலையில் இருப்பர்.

மேலும் குடி நீருக்கான ஆதாரம் கேள்விக்குள்ளாயிருக்கும் நிலையில் அவர்கள் பயன்படுத்தப்படும் குடி நீரும் பாதுகாப்பானதாக இருப்பதில்லை. பாலில் தண்ணீரை அதிகமாகக் கலப்பதினால் குழந்தைக்குச் சத்துக்குறைபாடு ஏற்படுவதோடு, தண்ணீர் காரணமாக ஏற்படும் நோய்தாக்கும் அபாயமும் உயருகிறது. இது உடலியல் மற்றும் உளவியல் வளர்ச்சியில் தடைகள் மற்றும் தாமதம் ஏற்படுத்துவதில் போய் முடியும்." என்று கூறுகிறது.

இந்தியத் தாய் ஒருவர் சராசரியாக நாள் ஒன்றுக்கு 600 முதல் 800 மில்லிலிட்டர் தாய்ப் பாலூட்ட இயலும் நிலையில் (அவளின் சத்து நிலையைப் பொறுத்து), அவளால் தனது குழந்தைக்கு தாய்ப்பாலூட்ட இயலாது போகும் நிலையில் குழந்தைக்கு 24 மணி நேரத்தில் குறைந்தது 600 மில்லி லிட்டர் அளவுக்காவது தண்ணீர் கலக்காத பால் அளிக்கப்பட வேண்டும். மேற்கண்ட அறிக்கை 1998 ஆம் ஆண்டு ஹைதராபாத், மருத்துவ ஆய்வுக்குழுவின், தேசிய ஊட்டச்சத்துக் கல்வி நிறுவனம் வெளியிட்ட 'இந்தியர்களுக்கான உணவு முறை வழிகாட்டி– ஒரு கையேடு' என்பதை மேற்கோளாக்கி காட்டுகிறது. இந்தக்கையேடு 6 மாதப் பச்சிளங்குழந்தைகள் முதலாக 6 வயது வரையுள்ள குழந்தைகளுக்கானது. இந்தக்கையேடு 6 முதல் 12 மாதங்கள் வரை, 1 முதல் 3 வயதுவரை, 4 முதல் 6வயது வரையுள்ள குழந்தைகளுக்கென தனித்தனியே

கீழ்கண்டவாறு பட்டியலிட்டுள்ளது.

| | 6 முதல் 12 மாதங்கள் | 1 முதல் 3 வயது வரை | 3 முதல் 6 வயது வரை |
|---|---|---|---|
| அரிசி மற்றும் தானிய அடிப்படையிலான [illegible] | 45 | 60 முதல் 120 | 150 முதல் 200 கிராம் |
| புரதச்சத்து உணவுகள் | 15 | 30 | 45 |
| பால் (தாய்ப்பால் இல்லையெனில்) | 500 | 500 | 500 மி.லி |
| கிழங்கு வகைகள் | 50 | 50 | 100 கி |
| [illegible] காய்கறிகள் | 25 | 50 | 50 கி |
| இதர காய்கறிகள் | 25 | 50 | 50 கி |
| பழங்கள் | 100 | 100 | 100 கி |
| சர்க்கரை | 25 | 25 | 30 கி |
| கொழுப்புச் சத்து எண்ணெய் | 10 | 20 | 25 மி.லி |

மேற்கண்ட உணவு வகைகளை வீதங்களாக அளிப்பதன் அடிப்படைக் கோட்பாடே அதிக சத்துள்ள/குறைந்த சத்துள்ள உணவுப்பொருட்கள் அளிக்கப்பட்டு குழந்தையின் வளர்ச்சி சமநிலையில் இருக்க வேண்டுமென்ற முக்கியத்துவம் கருதியே அளிக்கப்பட்டுள்ளது.

சிறைக்கையேடு மற்றும் இதர தொடர்புடைய விதிகள், நடைமுறைக் குறிப்புகள் யாவும் மேற்கண்ட வழிகாட்டுதலுக்கேற்றவாறு மூன்று மாதங்களுக்குள் திருத்தப்பட வேண்டும். அரசியல் சட்டங்களை வகுக்கக்கூடிய இடத்தில் உள்ளவர்கள் இதுபோன்ற குறைபாடுகளை நீக்குவதற்கு எவ்வளவு தேவையோ அந்த அளவுக்கு தீவிரமான சட்டங்களைப் படைக்க வேண்டும்.

சிறைகளில் உள்ள பெண்கைதிகள் மற்றும் அவர்களது குழந்தைகள் நலன் தொடர்பாக மேற்கண்ட வழிகாட்டு நெறிமுறைகள் உறுதியாகக் கடைபிடிக்கப்படுகிறதா என அவ்வப்போது குறிப்பிட்ட கால இடைவெளிகளில் மாநில சட்டப்பணிகள் ஆய்வுக்குழுவானது சோதனை மேற்கொள்வதோடு தொடர்ந்து கண்காணிக்கவும் வேண்டும். அலுவலர் குழந்தையின் வயது குறித்து முடிவு செய்வார்.

பெண்கைதிகளோடு அவர்களது குழந்தைகளும் சிறையிலிருக்க நேருகிற அத்தகைய பெண் கைதிகள் மீதான தனிச்சிறப்பு வாய்ந்த வழக்குகளில் முன்னுரிமை அடிப்படையில் விரைவாக நீதி வழங்க இத்தகைய வழக்குகளைக் கையாளும் நீதிமன்றங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### 11. சர்வதேச மாநாடுகள்

குழந்தைகள் உரிமைக்கான சர்வதேச மாநாட்டில் நிறைவேற்றப்பட்டு, இந்திய அரசால் 1989 நவம்பர் 20ல் ஏற்பளிப்பு அளிக்கப்பட்ட குழந்தைகள் உரிமை தீர்மானம் ஆனது அவன் அல்லது அவளது தனித்தன்மையான வளர்ச்சியானது இணக்கப்பூர்வமான சமூக சூழல்கிடையே ஏற்றப்பட வேண்டுமென அங்கீகரிக்கிறது. மனித உரிமைகளுக்கான அனைத்துலக பிறகடனத்தின் விதி 26 (1) ஆனது ஒவ்வொருவருக்கும் குறைந்தது ஆரம்பக் கல்வியேனும் அல்லது அடித்தள நிலைகளிலும் இலவசமாகக் கல்வி அளிக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்துகிறது. குழந்தைகள் உரிமைகளுக்கு தனிச்சிறப்பான பாதுகாப்பு இருக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல் உலகம் முழுமையிலும், அமைதி மற்றும் பாதுகாப்பான சூழல் நிலவும் காலங்களில் கூட குழந்தைகளின் வளர்ச்சி வாய்ப்பு இடையறாது தொடர உத்தரவாதம் இருக்க வேண்டும் என குழந்தை உரிமைக்கான 1989 ஆம் ஆண்டின் சர்வதேச மாநாடு அறைகூவல் விடுத்துள்ளது.

### 12. மாதிரி சிறைக்கையேட்டின் பரிந்துரைகள் :

சிறைகளில் உள்ள பெண் கைதிகளின் குழந்தைகள் நிலையை மேம்படுத்துவது குறித்து, உள்துறையைச் சேர்ந்த ''காவல்துறை ஆய்வு மற்றும் வளர்ச்சி மையம்'' வெளியிட்டுள்ள ''இந்திய சிறைகளில் மேலாண்மை குறித்த சிறைக் கண்காணிப்பாளர்களுக்கான மாதிரி சிறைக் கையேடு–2003'' ஆனது கீழ்க்கண்ட பரிந்துரைகளை அளித்துள்ளது.

### சிறையில் மகப்பேறு :

எவ்வளவு சாத்தியமோ அந்த அளவுக்கு, கருவுற்ற சிறைக்கைதி ஒருவர் சிறைக்கு வெளியே தனது மகப்பேறு நிகழ்வை வைத்துக்கொள்ள விரும்பும் வேளையில் அதற்கான வாய்ப்பு அளிக்க வேண்டும். அவருக்கு தற்காலிக விடுதலை (அல்லது அவர் தற்செயல் குற்றவாளியாக இருந்தால் தண்டனையை இடைநீக்கம் செய்வது) அளிக்கப்பட வேண்டும். ஏதேனும் ஒரு பெண் கைதி தொடர்பாக பாதுகாப்பு குறித்த உயர்மட்ட அபாயம் இருந்தால் மட்டுமே அத்தகையவருக்கு இந்த உரிமை மறுக்கப்படலாம்.

சிறைக்குள் நிகழும் மகப்பேறுகள் யாவும் உள்ளூர் பிறப்பு இறப்பு பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட வேண்டும். ஆனால் பிறப்புச் சான்றிதழ் குழந்தை பிறந்த இடம் சிறைச்சாலை என்பதாக குறிப்பிடப்படக் கூடாது. பதிவுச் சான்றிதழ் முகவரி மட்டுமே குறிப்பிடப்பட வேண்டும். சூழல் எவ்வளவு காலம் அனுமதிக்குமோ அவ்வளவு காலம் வரை பெயர் சூட்டும் சடங்கை ஒத்தி வைக்கும் உரிமை தாய்க்கு அளிக்கப்பட வேண்டும்.

### பெண்கைதிகளின் குழந்தைகள் :

ஒரு குழந்தையை, தொடர்புடைய உறவினர் எவரும் பராமரிக்க முன்வராத நிலையில் அக்குழந்தை தன் தாயாரோடு வசிக்க சிறைக்குள் அனுமதிக்கலாம். சிறைக்குள் பிறந்த குழந்தைகள் யாவரும் வேறு எவரும் பராமரிக்க இயலாத நிலையில் அவர்களது ஆறு வயது வரையில் தன் தாயாரோடு சிறையில் வசிக்க அனுமதிக்கலாம். இந்தப் பிரச்சனை தொடர்பாக சிறை மருத்துவ அலுவலர் குழந்தைகள் வயது குறித்து முடிவு செய்வார்.

ஆறு வயது நிறைந்த பின்னர் எந்த ஒரு குழந்தையும் சிறைக்குள் தொடர்ந்து வசிக்கவோ அல்லது புதிதாக சேர்க்கப்படவோ அனுமதிக்கப்படக்கூடாது. சிறைக்குள் இருக்கும் குறிப்பிட்ட வயது குழந்தைகள் அனைவரையும் பற்றிய எல்லா விவரங்களையும் குறிப்பிட்ட சிறையின் கண்காணிப்பாளர் சமூக நலத்துறை இயக்குநருக்கு

அறிக்கையாக அளிக்க வேண்டும். இது அக்குழந்தைகளை சமூக நலத்துறை நடத்தும் இல்லங்களில் சேர்த்திட உதவிகரமாக இருக்கும். அக்குழந்தைகளது தாயார் சிறையில் இருந்து விடுதலையாகும் காலம் வரையிலோ அல்லது தாங்களே தங்களது வாழ்வாதாரத்திற்கான வருவாயை ஈட்டும் காலம் வரையிலோ இக்குழந்தைகளை அரசு தனது பாதுகாப்பில் வைத்திருக்க வேண்டும்.

அரசு இல்லத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டள்ள மேற்கண்ட குழந்தைகள் சிறையில் இருக்கும் தனது தாயாரை வாரம் ஒருமுறையேனும் சந்திக்க அனுமதியளிக்க வேண்டும். இது குறித்து சிறைக்கண்காணிப்பாளர் குறிப்பிடும் நாளில் குழந்தைகள் சிறைச்சாலைக்குச் சென்று தமது தாயாரை சந்திப்பதை சமூக நலத்துறை இயக்குனர் உத்தரவாதப்படுத்த வேண்டும்.

### பெண் கைதிகளது குழந்தைகளின் நலன் :

பெண் கைதிகளின் குழந்தைகளுக்காக சிறையோடு இணைந்தாற்போலவே குழந்தைகள் காப்பகம் ஒன்றும், மழலையர் பள்ளி ஒன்றும் அமைக்கப்பட வேண்டும். மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகள் காப்பகத்திலும், மூன்று வயது முதல் ஆறுவயதுக்குட்பட்ட குழந்தைகள் மழலையர் பள்ளியிலும் வைத்துப் பராமரிக்கப்பட வேண்டும்.

சிறை நிர்வாகத்தால் நடத்தப்படும் இந்த காப்பகம் மற்றும் மழலைப்பள்ளி ஆகியவை சிறை வளாகத்திற்கு வெளியே இருக்குமாறு பார்த்துக் கொள்ளல் நலம் பயக்கும்.

குழந்தைகளுக்கு உள்ளூர் தட்பவெப்ப நிலைக்கேற்ற தேவைகளை கருத்தில் கொண்டு பொருத்தமான உடைகளை அளிக்க வேண்டும். இது குறித்து மாநில/யூனியன் பிரதேச அரசு பொருத்தமான அளவீடுகளை நிர்ணயித்தல் வேண்டும்.

குழந்தைகள் வளர்ச்சிக்கான மருத்துவ அடிப்படைகள் மற்றும் ஊட்டச்சத்து அடிப்படையிலான உணவு முறைகள், பிரதேசத்தின் தட்பவெட்ப நிலைக்கேற்ப கணக்கிடப்பட்டு சிறையில் உள்ள குழந்தைகளுக்கு அளிக்கப்பட வேண்டும்.

குழந்தைகளின் உடலியல் வளர்ச்சி தொடர்பாக பெண் மருத்துவ அலுவலர் ஒருவரால் அவர்கள் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் தொடர்ந்து பரிசோதனை செய்யப்பட்டு கண்காணிக்கப்பட்டு வரவேண்டும். அதேபோல இளம்பிள்ளை வாதம் மற்றும் சின்னம்மை போன்ற பல்வேறு நோய்களுக்கான தடுப்பூசி குறிப்பிட்ட காலங்களில் குழந்தைகளுக்கு இடப்பட வேண்டும். மருத்துவ அலுவலரின் எழுத்துமூலமான பரிந்துரையின் பேரில் மேற்கண்ட குழந்தைகளுக்கு கூடுதலாக உடைகள் மற்றும் உணவு அளிக்கப்பட வேண்டும்.

### பெண் கைதிகளின் குழந்தைகளுக்கான கல்வி மற்றும் பொழுதுபோக்கு :

தம் தாயாரோடு சிறைக்குள் வசிக்கும் குழந்தைகளுக்கு முறையான கல்வி மற்றும் பொழுதுபோக்கு வசதிகள் அளிக்கப்பட வேண்டும். குழந்தைகளின் தாயார் சிறையில் பணியில் இருக்கும் வேளைகளில் அவர்கள் செவிலியர் அல்லது சிறைக்காவலர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் காப்பகத்திலோ அல்லது இதர மழலையர் பள்ளியிலோ இருக்க வேண்டும். இத்தகைய வசதிகள் பெண் சிறைக்காவலர் அல்லது பெண் அலுவலரின் குழந்தைகளுக்கும் கிட்டுமாறு நீட்டித்தல் வேண்டும்.

### உணவு :

பெண் கைதிகளுக்கான சிறைகளில் உணவு தயாரிக்கும் கூடத்தை மேலாண்மை செய்வதிலோ, அல்லது சிறையின் சமையல் பணிகளிலோ எவ்வகையிலும் சாதிய, மத அடிப்படையிலான கண்ணோட்டங்கள் நிலவுவது முற்றிலும் தடை செய்யப்பட வேண்டும்.

குழந்தைகளைப் பேணும் பெண் கைதிகளுக்கும், அவர்களைச் சார்ந்துள்ள குழந்தைகளுக்கும் தேவையான போதுமான ஊட்டச்சத்துக்கள் அடங்கிய உணவு அளிக்கப்பட வேண்டும். உணவுப் பொருட்கள் தரமாக இருக்க வேண்டும். கருவுற்ற பெண் கைதிகளுக்கும், குழந்தைகளைப் பேணும் பெண் கைதிகளுக்கும், தனிச்சிறப்பு வாய்ந்த தரமான உணவு பரிந்துரைக்கப்பட வேண்டும். தேசியச் சிறப்பு வாய்ந்த நாட்களிலும், விழாக் காலங்களிலும் பெண் கைதிகளுக்கென சிறப்பான உணவு அளிக்கப்பட வேண்டும். இது குறித்து சிறை விதிகளில் தனியே வழி வகுக்கலாம். சிறைக்குள் அளிக்கப்படும் உணவு தூய்மையான நிலைமைகளில், ஊட்டச்சத்து மிக்கதாகவும் தயாரிக்கப்படுவதை சிறை மருத்துவ அலுவலர் உறுதி செய்ய வேண்டும்.

## References:


1. M.C. Mehta Vs.State of T.N and others, AIR 1997 SC-699, 1996-SCC-6-756
2. Biharilal Dobray Vs. Roshan Lal Dobray, AIR 1984 SC-385, 1984-SCC-1-551
3. Bandhua Mukti Morcha etc., Vs. Union of India and others, AIR 1997 SC – 2218, 1997-SCC-10-549

4. Sheela Barse Vs. Secretary, Children's Aid Society (1987) 3 SCC 50
5. Sheela Barse Vs. The Secretary, Children Aid Society and others, AIR 1987 SC-656 1987-SCC-3-50
6. Bandhua Mukti Morcha etc., Vs. Union of India and others, AIR 1997 SC-2218, 1997-SCC-10-549
7. Final Report on Children of Women Prisoners in Jails: A Study in Uttar Pradesh Sponsored by : Planning Commission, Government of India, New Delhi – 110 001 Conducted by Pandit Govind ballabh Pant Institute of Studies in Rural Development, Lucknow, 2004
8. R.D.Upadhyay Vs. State of A.P. and others, AIR 2006 SC1946
9. Final Report on Children of Women Prisoners in Jails: A Study in Uttar Pradesh Sponsored by : Planning Commission, Government of India, New Delhi – 110 001 Conducted by Pandit Govind ballabh Pant Institute of Studies in Rural Development, Lucknow, 2004
10. R.D.Upadhyay Vs. State of A.P. and others, AIR 2006 SC1946
11. R.D.Upadhyay Vs. State of A.P. and others, AIR 2006 SC1946
12. Avinash Nagra Vs. Navodaya Vidyalaya Samiti, 1997-SCC-2-534
13. M.C. Mehta Vs.State of T.N and others, AIR 1997 SC-699, 1996-SCC-6-756
14. Bandhua Mukti Morcha etc., Vs. Union of India and others, AIR 1997 SC-2218, 1997-SCC-10-549
15. Bandhua Mukti Morcha etc., Vs. Union of India and others, AIR 1997 SC-2218, 1997-SCC-10-549
16. Bandhua Mukti Morcha etc., Vs. Union of India and others, AIR 1997 SC-2218, 1997-SCC-10-549
17. Miss. Mohini Jain Vs. State of Kar. and others, AIR 1992 SC-1858, 1992-SCC-3-666
18. Avinash Nagra Vs. Navodaya Vidyalaya Samiti, 1997-SCC-2-534
19. Miss. Mohini Jain Vs. State of Kar. and others, AIR 1992 SC-1858, 1992-SCC-3-666
20. Avinash Nagra Vs. Navodaya Vidyalaya Samiti, 1997-SCC-2-534
21. Bandhua Mukti Morcha etc., Vs. Union of India and others, AIR 1997 SC-2218, 1997-SCC-10-549
22. Avinash Nagra Vs. Navodaya Vidyalaya Samiti, 1997-SCC-2-534
23. Miss. Mohini Jain Vs. State of Kar. and others, AIR 1992 SC-1858, 1992-SCC-3-666
24. J.P. Unnikrishnana Vs. State of A.P. (1993) 1 SCC 645:1993 AIR SCW 863
25. Maharashtra State Board of Secondary and Higher Education Vs. K.S.Gandhi, (1991) 2 SCC 716: (1991) AIR SCW 879),
26. Ganapathi National Middle School Vs. M.Durai Kannan (dead) by Lrs. and others, AIR 1996 SC – 2803, 1996-SCC-6-464
27. Miss. Mohini Jain Vs. State of Kar. and others, AIR 1992 SC-1858, 1992-SCC-3-666
28. Final Report on Children of Women Prisoners in Jails: A Study in Uttar Pradesh Sponsored by : Planning Commission, Government of India, New Delhi – 110 001 Conducted by Pandit Govind ballabh Pant Institute of Studies in Rural Development, Lucknow, 2004
29. R.D.Upadhyay Vs. State of A.P. and others, AIR 2006 SC1946
30. Bandhua Mukti Morcha etc., Vs. Union of India and others, AIR 1997 SC-2218, 1997-SCC-10-549

31. M.C. Mehta Vs.State of T.N and others, AIR 1997 SC-699, 1996-SCC-6-756

***Source:***

Law and Practice of Rights of Prisoners by A.Sirajudeen, Advocate Council of Indian Jurisprudence, 152,Broadway, Chennai.

# குழந்தையை மீண்டும் பரிசோதிக்கக் கூடாது

யு.கே.ஜி., மாணவி மீதான பாலியல் துன்புறுத்தல் வழக்கை, சி.பி.ஐ., விசாரணைக்கு மாற்றி, சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது. விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சியில், தனியார் பள்ளியில் படித்த யு.கே.ஜி., மாணவியை, பள்ளியின் ஆசிரியைகள் இருவர், பாலியல் துன்புறுத்தல் செய்ததாக புகார் கூறப்பட்டது. வழக்கு பதிவு செய்யப்பட்டு, சி.பி.சி.ஐ.டி, போலீசார் விசாரித்தனர். இச்சம்பவம் தொடர்பான வழக்கை தலைமை நீதிபதி இக்பால், நீதிபதி சிவஞானம் அடங்கிய, 'முதல் பெஞ்ச்' விசாரித்தது, ஐகோர்ட்டில் சி.பி.சி.ஐ.டி, போலீசார், அறிக்கையை தாக்கல் செய்தனர்.

**இவ்வழக்கில், 'முதல் பெஞ்ச்' பிறப்பித்த உத்தரவு:**

கடந்த மாதம், 23ம் தேதி வழக்கு விசாரணைக்கு வந்தபோது, சி.பி.சி.ஐ.டி, டி.எஸ்.பி., தாக்கல் செய்த அறிக்கையில், மீண்டும் அந்த குழந்தையை பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும் என கூறப்பட்டது. ஏற்கெனவே, அந்த குழந்தையை அரசு மருத்துவமனை டாக்டர் அதிதா ஆனந்தி என்பவர் பரிசோதித்து, முக்கிய உறுப்பில் காயம் ஏற்பட்டுள்ளது. என, அறிக்கை அளித்துள்ளார். அதை, மற்றொரு டாக்டர் சியாமளா தேவி என்பவரும் ஒப்புக்கொண்டுள்ளார். அதையடுத்து, 75 நாட்களுக்குப் பின், குழந்தையை பரிசோதித்த, மற்றொரு டாக்டர்கள் குழுவானது, வேறு விதமான கருத்தை தெரிவித்துள்ளது.

கடந்த 1ம் தேதி, டிஎஸ்பி தாக்கல் செய்த அறிக்கையில், ஆசிரியைகளுக்கு எதிராக சில குற்றச்சாட்டுகளை, அனாமதேய நபர் ஒருவர் தெரிவித்ததாகவும், அதன் அடிப்படையில் விசாரணை நடப்பதாகவும், இரண்டு ஆசிரியைகளும் மறுப்பதாகவும், அனாமதேய நபரை கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளார். சி.பி.சி.ஐ.டி.,யின் அறிக்கையை பார்க்கும்போது, புலன் விசாரணை சரியாக இல்லை என்பது தெரிகிறது. குழந்தையை மீண்டும் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும் என சிபிசிஐடி போலீசார் வலியுறுத்துவதைப் பார்க்கும்போது, குற்றவாளிகளை பாதுகாக்க முயற்சிக்கிறதா என்கிற சந்தேகம், சிபிசிஐடி, மீது ஏற்படுகிறது.

குழந்தையை மீண்டும் பரிசோதனைக்கு உட்படுத்தக் கூடாது. கோர்ட்டுக்கு நம்பிக்கை ஏற்படும் விதத்தில், மாநில அரசின் சிறப்புப் பிரிவானது செயல்பட தவறியதால், இந்த வழக்கை சிபிஐ விசாரணைக்கு மாற்றுவதற்கு, இது தகுதியானது. எனவே, இந்த வழக்கை சிபிஐ விசாரணைக்கு மாற்ற உத்தரவிடப்படுகிறது. உடனடியாக புலன்விசாரணையை துவக்கி, 60 நாட்களுக்குள் இறுதி அறிக்கையை சிபிஐ தாக்கல் செய்ய வேண்டும். இவ்வாறு. 'முதல் பெஞ்ச்' உத்தரவிட்டுள்ளது.

# கட்டாய இலவசக் கல்வி: அரசு விதிகள் நியாயமானவையா?

– டாக்டர் எஸ்.எஸ். ராஜகோபாலன்

"மோகினி ஜெயின் எதிர் கர்நாடக அரசு (1991)" வழக்கில், மருத்தவக் கல்வி உள்ளிட்ட அனைத்து நிலைக்கல்வியும் அடிப்படை உரிமை என்றும், அதனை அளிப்பது அரசின் பொறுப்பு என்றும் வரலாற்றுச் சிறப்புமிக்கத் தீர்ப்பை உச்சநீதிமன்றம் வழங்கியது. அதனை எதிர்த்து நடுவணரசும் தனியார் கல்விக்கூட நிர்வாகிகளும் மேல் முறையீடு செய்தனர். அவற்றையெல்லாம் இணைத்து 'உன்னி கிருஷ்ணன் எதிர் ஆந்திர அரசு' என்ற வழக்கில், 14 வயது வரையுள்ள கல்வி மட்டுமே அடிப்படை உரிமை என்றும், அதனை அரசு இலவசமாக அளித்திட வேண்டுமென்றும் 1993–ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் முந்தையத் தீர்ப்பை மாற்றி அமைத்தது. இத்தீர்ப்பினைச் செயல்படுத்தத் தேவையான அரசியல் சட்டத் திருத்தம் பல போராட்டங்களுக்குப் பின்னர் 2005–ல் 86வது அரசமைப்புச் சட்டத்திருத்தம் நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது. 6 முதல் 14 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு அரசு நிர்ணயித்த வண்ணம் இலவசக் கட்டாயக் கல்வி அளிக்க வேண்டுமென்று ஒரு நிபந்தனையுடன் அடிப்படை உரிமையாக்கப்பட்டது. இதற்குத் தேவையான சட்டத்தைக் கொண்டுவர மேலும் நான்கு ஆண்டுகள் எடுத்துக் கொண்டு, இலவசக் கட்டாயக் கல்விக்கான குழந்தைகளின் உரிமைச் சட்டம், 2009 நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்டது. இச்சட்டத்தினைச் செயல்படுத்தத் தேவையான விதிகள் இயற்றும் பொறுப்பை மாநில அரசுகளிடம் ஒப்படைத்துவிட்டு நடுவணரசு மாதிரி விதிகளை மட்டும் வெளியிட்டது. 1.4.2010 அன்று சட்டம் அமலுக்கு வருவதாக அறிவிக்கப்பட்டது. முந்தைய திமுக அரசு முன்வரைவு விதிகளை வெளியிட்டு மக்களின் கருத்தைக் கோரியது. விதிகளை இறுதிப்படுத்துவதற்கு முன்னரே ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. புதிய அரசு 8.11.2011 அன்று விதிகளை வெளியிட்டுள்ளது.

### இலவச கட்டாய கல்விச்சட்டம் 2009: நிறைகளும் குறைகளும்

இச்சட்டம் சமூகப் போராளிகள் எதிர்பார்த்த முறையில் அமையவில்லை. அரசு கடைபிடிக்கும் தாராளமய, தனியார்மயக் கொள்கைகளின் அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டுள்ளது. பெயரில் இலவசம் என்ற சொல் இருந்தாலும் கட்டணப் பள்ளிகளுக்கும் இடம் அளிப்பதால் அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவசக் கல்வி கிடைக்காது. சட்டத்தில் சில வரவேற்கத்தக்க அம்சங்கள் இருக்கின்றன. அவற்றில் சில: பள்ளிகள் அமைவிடம் குழந்தைகள் எளிதாகச் சென்றடையும் வண்ணம் இருக்க வேண்டும்; 5–ஆம் வகுப்பு வரை படிக்க 1 கி.மீ. தொலைவிற்குள்ளும் 8–ஆம் வகுப்பு வரை படிக்க 3கி.மீ. தொலைவிற்குள்ளும் பள்ளிகள் அமைய வேண்டும்.

அரசு அங்கீகாரமில்லாது எப்பள்ளியும் இயங்கக்கூடாது. அங்கீகாரம் பெறாத அல்லது மறுக்கப்பட்ட பள்ளிகளில் பயிலும் குழந்தைகளை வேறு பள்ளியில் சேர்ப்பது அரசின பொறுப்பாகும். பள்ளிச் சேர்க்கை எளிதாக்கப்பட்டுள்ளது. நுழைவுத் தேர்வு, பெற்றோரை அல்லது குழந்தைகளை நேர்காணல், வயதுச் சான்றிதழ், நன்கொடை ஆகியவை தடை செய்யப்பட்டுள்ளன. மாற்றுகைச் சான்றிதழ் குழந்தைகளின் உரிமை. அதனைத் தர மறுத்தாலோ, கால தாமதம் செய்தாலோ தண்டனைக்கு உட்படுத்தப்படும்.

பள்ளியில் சேராமலோ, அல்லது பள்ளியிலிருந்து இடை விலகியோ இருக்கும் குழந்தைகள் பள்ளியில் மீண்டும் சேரும்போது அவர்கள் வயதுக்கேற்ற வகுப்பில் சேர்த்துக்கொள்ள வேண்டும். அக்குழந்தைகள் சேரும் வகுப்பிற்குத் தகுதியுள்ளவராக்கும் பொறுப்பு பள்ளியைச் சார்ந்தது. 3 முதல் 6 வயது வரையிலான குழந்தைகளுக்கு முன்பருவக் கல்வி அளித்திட வேண்டும். பள்ளிகளில் எவ்வித பாகுபாடுகளுக்கும் எந்த குழந்தையும் உட்படுத்தக்கூடாது. பள்ளிகளில் உடல், மனரீதியான தண்டனைகள் ஒழிக்கப்பட்டுள்ளது. எந்த வகுப்பிலும் மாணவர்கள் ஒராண்டிற்கு மேல் தக்கவைக்கக் கூடாது. இடையில் பள்ளியைவிட்டு வெளியேற்றவும் கூடாது.

அரசு உதவிபெறா தனியார் பள்ளிகளில் 25 விழுக்காடு இடங்கள் பள்ளிக்கு அருகில் வசிக்கும் எளியவர் வீட்டுக் குழந்தைகளுக்கு ஒதுக்கப்பட வேண்டும். தகுதி பெற்ற ஆசிரியர்கள்தான் நியமிக்கப்பட வேண்டும்.கல்விப் பணியல்லாத மாற்றுப்பணிகளில் ஆசிரியர்களைப் பயன்படுத்தக்கூடாது. ஒவ்வொரு பள்ளிக்கும் பெற்றோரைப் பெரும்பான்மையோராகக் கொண்ட பள்ளி நிர்வாகக்குழு அமைக்கப்பட்டு செயல்பட வேண்டும்.

இவ்வாறு சில சிறப்பம்சங்கள் கொண்ட சட்டத்தில் பல்வேறு கவலை தரும் சரத்துகளும் இருக்கின்றன. அவற்றில் சில:

அரசமைப்பு சாசனம் அளித்துள்ள சமத்துவக்

கோட்பாட்டிற்கு முரணாக இச்சட்டம் அமைந்துள்ளது. இச்சட்டத்தைச் செயல்படுத்தத் தேவையான நிதி பற்றி மௌனம் சாதிக்கின்றது. மோகினி ஜெயின், உன்னி கிருஷ்ணன் வழக்குத் தீர்ப்புகளின் படி அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவசக் கல்வி அளிக்க வேண்டும். சட்டத்தின் தலைப்பு இலவசக் கட்டாயக் கல்வி என் இருந்தும், கட்டணப் பள்ளிகளை ஏற்றுள்ளது பெரும் குறை. தன் பொறுப்பிலிருந்து அரசு நழுவுகின்றது என்பதோடு, தனியார் பள்ளிகளில் 25 விழுக்காடு ஒதுக்கீட்டில் சேரும் மாணவருக்கான கட்டணத் தொகையை அப்பள்ளிகளுக்கு அரசு வழங்கிடுவது நியாயமற்ற செயல். பள்ளி நிர்ணயித்தக் கட்டணத்திற்கு அதிகமாக பெறப்படுவதே தலைக் கட்டணம் என்று வரையறுத்துள்ளதால் தலைக் கட்டணத்தையும் சேர்த்து பள்ளிகள் கட்டணத்தை நிர்ணயிக்க வழிசெய்யப்பட்டுள்ளது. தனியார் பள்ளிகளில் சேரும் எளியவர் குடும்பத்து மாணவருக்கு அரசு திருப்பித்தரும் கட்டணத்திற்கு மேல் அப்பள்ளிகள் வசூல் செய்தால் அத்தொகை அம்மாணவர் தலையில்தான் விழும். இதுபோன்ற பல குறைபாடுகள் சட்டத்தில் உள்ளன.

### கட்டாயக் கல்வி விதிகள்

நடுவணரசு மாதிரி விதிகளை மட்டும் வெளியிட்டுவிட்டு அந்தந்த மாநில அரசுகள் விதிகளை இயற்றிக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டது. பொதுவாக ஒரு சட்டத்தினை நடைமுறைப்படுத்த விதிகள் சரத்துவாரியாக விளக்கங்களும், நடைமுறைகளையும் கொண்டிருக்கும். ஆனால், சட்டத்தின் சில பகுதிகளை ஒட்டியே மாதிரி விதிகள் அமைந்துள்ளன. பல மாநிலங்கள் விரிவாக விதிகள் இயற்றியுள்ளன. ஆனால், திமுக அரசு தயாரித்த முன்வரைவு விதிகளும், இன்றைய அரசு வெளியிட்ட விதிகளும் மாதிரி விதி வரிசையிலேயே அமைந்து பலவற்றிற்கு விளக்கங்கள் இல்லாதவாறு அமைந்துள்ளன.

முன்வரைவு விதிகள் சட்டத்திற்குப் புறம்பாகப் பல மாற்றங்களைக் கொண்டுள்ளன. முக்கியமாக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்கப்பட்டுள்ள பொறுப்புகளையும், கடமைகளையும் முழுமையாக மறுத்து, உள்ளாட்சிகள் என்பதற்கு மாறாக வட்டாரக் கல்வி ஆணையங்கள் என்பனவற்றை உருவாக்கி, வட்ட, மாவட்ட, மாநில அளவில் அவற்றை நடைமுறைப்படுத்த உதவிக் கல்வி அலுவலர், மாவட்ட, முதன்மைக் கல்வி அலுவலர்கள், இயக்குநர் என்று வரையறுத்து முழு அதிகாரத்தையும் அரசு அதிகாரவர்க்கத்திடம் ஒப்படைத்திருப்பது அதிகாரப் பரவல் கோட்பாட்டிற்கு எதிரானது. அதிகாரவர்க்கம் தங்கள் அதிகாரவரம்பைச் சிறிதும் குறைத்துக் கொள்ள விரும்பாத நிலையையே இது எடுத்துக்காட்டுகின்றது. அரசு மக்கள் பக்கமா, அதிகாரவர்க்கத்தின் பக்கமா என்ற வினாவிற்குத் தெளிவான விடை தெரிந்துவிட்டது. எக்காரணம் தொட்டும் உள்ளூர் அமைப்புகள் வலிமை பெறுவதை அரசோ, அரசு அதிகாரிகளோ விரும்பவில்லை என்பதை அறியலாம்.

இரு அரசுகளும் குறைத்தீர்ப்பு மையங்கள் அமைத்தல், குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு ஆணையம், கல்வி உரிமைப் பாதுகாப்பு ஆணையம், கல்வி உரிமைப் பாதுகாப்பு ஆணையம் பற்றிய பகுதிகளை முழுமையாக நீக்கிவிட்டதும் கவனிக்கத்தக்கது. அடிப்படையில் இரு அரசுகளும் ஏழை, எளியவர் நலனைப் புறக்கணிப்பதில் ஒரு மனத்தவர், சட்டமோ, மாதிரி விதிகளோ, தமிழக விதிகளோ ஆசிரியர்களுக்குக் கல்வித் திட்டத்தில் உரிய பங்கு அளிக்காது. அவர்களைக் கூலிக்காரர்கள் போன்றே நடத்த முற்படுகின்றன. அது போலவே மாணவரும் உரிமை ஏதுமற்ற ஜடப் பொருளாகவேக் கருதப்படுகின்றனர். ஆனால், கல்வி அமைப்பில் மிக முக்கியமான பாத்திரங்கள் ஆசிரியர்களும், மாணவர்களும்தான் என்பதை ஏற்க அரசுகள் தயாராக இல்லை. இக்கண்ணோட்டம் மிகவும் பழுதானது, முன்னேற்றப் பாதையில் எடுத்துச் செல்லாதது.

நலிந்தவருக்கு தனியார் பள்ளிகளில் 25 விழுக்காடு இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதை ஒரு முற்போக்கான திட்டமாக நடுத்தர வர்க்கத்தினர் வரவேற்றுள்ளனர். அவ்விடங்களைக் கைப்பற்றுவதில் குறியாக உள்ளனர். தனியார் பள்ளிகளோ குடிசை வாழ் மக்கள் தங்கள் பள்ளியில் சேர்ந்தால் சேரி மொழியும், ஒழுக்கக்கேடும் பிற மாணவர்களைத் தொத்திக் கொள்ளும் என்றும், குடிசை வாழ் மாணவர்களின் கற்றல் திறன் குறைவாக இருக்குமாதலால் ஆசிரியர் நேரத்தை அதிகமாக அவர்கள் எடுத்துக்கொள்வர் என்றும், அதனால் பிறமாணவர்களுக்கான ஆசிரியர் நேரம் குறையுமென்றும் வாதிட்டு இந்த சரத்தை நீக்க வேண்டி செயல்படுகின்றனர். ரூபாய் 2 இலட்சத்திற்குக் குறைவான ஆண்டு வருமானம் உள்ளவரே நலிந்தவர் என்று தமிழக அரசு விதிகள் வரையறுத்துள்ளதால் குடிசைவாழ் மக்களுக்குப் பதிலாக நடுத்தர வர்க்கத்தினர் வருமானச் சான்றிதழ் கொடுத்து இவ்விடங்களில் தங்கள் குழந்தைகளைச் சேர்ப்பார்கள். எளியவர் தொடர்ந்து அரசுப் பள்ளிகளே தங்கள் புகலிடம் என்று சமாதானம் அடைவர்.

### மக்கள் பொறுப்பு

நீதிமன்றத் தீர்ப்பிற்குப் பிறகு அரசியல் சட்டத்திருத்தம் கொண்டுவர 12 ஆண்டுகள் எடுத்துக்கொண்டதும், கல்வி உரிமைச் சட்டம் இயற்றிட மேலும் நான்கு

ஆண்டுகளானதும், விதிகள் இயற்றிட இன்னும் இரண்டு ஆண்டுகள் எடுத்துக்கொண்டதும் வெளிப்படுத்தும் உண்மை என்னவென்றால், அரசுகளுக்கு மெய்யாலுமே அனைத்து மக்களுக்கும் தரமான இலவசக் கல்வி அளிக்க வேண்டுமென்பதில் அக்கறை கிடையாது என்பதே. கண்துடைப்பாக வந்திருக்கும் இந்தச் சட்டத்தின் பயன் எளிய மக்களைச் சென்றடையப் போவதில்லை என்பது உறுதி.

கல்விக்காக மக்கள் ஒருமித்தக் குரலோடு போராட முன்வராததே இக்கல்வி மறுப்பிற்குக் காரணமாகும். அரசுப் பள்ளிகள் சீராக இயங்குவதை உறுதி செய்வதும், தங்கள் வீட்டருகில் உள்ள பள்ளியில் தங்கள் குழந்தைகளைச் சேர்க்கும் உரிமையும், பாகுபாடுகள் ஏதுமற்றப் பொதுப் பள்ளித் திட்டம் வேண்டியும் மக்கள் கிளர்ச்சி செய்ய வேண்டிய காலம் வந்துவிட்டது. தொடர்ந்து ஏமாற்றப்பட்டவர்களாக இருக்கும் நிலையிலிருந்து தங்களை மீட்டுக்கொள்ள மக்கள் முன்வர வேண்டும். கற்றறிந்த ஒரு சமுதாயத்தை உருவாக்கும் பணியில் அனைவரும் ஒன்று கூடுவோம். எலும்புத் துண்டுகளைக் கண்டு மயங்காது முழுமையான சமத்துவம் நோக்கிச் செல்லும் பயணத்தைத் தொடங்குவோம்.

**தீக்கதிர் –28.11.11**

# பெண் சிசு கருக்கலைப்புக் குற்றத்துக்காக 15 மருத்துவர்களின் பதிவு மட்டுமே ரத்து

பெண் சிசு கருக்கலைப்பு உத்திகள் தடுப்புச் சட்டத்தின்கீழ் இதுவரை 93 மருத்துவர்கள் தண்டிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 15 பேரின் மருத்துவப் பதிவு மட்டுமே ரத்து செய்யப்பட்டுள்ளது என்று மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் இணைச் செயலாளர் அனுராதா குப்தா தெரிவித்தார்.

ஜனவரி 24ம் தேதியை தேசிய பெண் குழந்தைகள் தினமாக அனுசரிப்பதென்று, பெண் சிசு கருக்கலைப்பு உத்திகள் தடுப்பு சட்டம் 1994ன் கீழ் அமைக்கப்பட்டுள்ள இந்திய தேசிய மேற்பார்வை வாரியம் முடிவு செய்துள்ளது. மேற்கண்ட தகவலை மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் இணை செயலாளர் அனுராதா குப்தா திங்களன்று நடந்த பத்திரிகையாளர் கூட்டத்தில் பேசும்போது கூறினார்.

கருவில் இருக்கும் சிசுவை ஆணா பெண்ணா என்று கண்டறிய பயன்டுத்தப்படும் அல்ட்ரா ஒலி கருவிகளின் விற்பனை, இருப்பு மற்றும் மறுவிற்பனையை கணக்கிட்டு கண்காணிக்கவும், இதனை பயன்படுத்தும் மருத்துவத்துறையைச் சார்ந்தவர்களுக்கென தனியாக செயல் மற்றும் நடத்தை விதிகளையும் உருவாக்க வாரியம் முடிவு செய்துள்ளதாகவும் குப்தா தெரிவித்தார். இப்படி ஒரு ஏற்பாடு இல்லாததால் மருத்துவத் துறையினர் புதிய தொழில்நுட்பத்துடன் வந்திருக்கும் அல்ட்ரா ஒலி கருவிகளை வாங்கும்போது கைவிடப்பட்ட, மறுவிற்பனை செய்யப்பட்ட பழைய கருவிகள் கருவில் இருக்கும் சிசுவை ஆணா பெண்ணா என கண்டறியும் சட்டவிரோதச் செயல்களுக்கு பயன்படுத்தப்படுகின்றன என்றும் கூறினார்.

### மாநில அரசுகளின் கடமை

அல்ட்ரா ஒலி கருவிகளை கண்காணிக்கும் பொறுப்பு மாநில அரசுகளின் கடமை என்றும், பதிவு செய்யப்படாமல் சட்ட விரோதமாக அல்ட்ரா ஒலி கருவிகளை வைத்திருக்கும் மருத்துவர்களுக்கு 3 ஆண்டு சிறைத் தண்டனையும் ஐம்பதாயிரம் வரை அபராதமும் விதிக்கப்படும் என்றும், அவ்வாறு 1994 வருடத்திய பெண் சிசு கருக்கலைப்பு உத்திகள் தடுப்பு சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படும் மருத்துவர்களின் பதிவுகளை ரத்து செய்யவும் நடவடிக்கைகளை எடுத்திருப்பதாகவும் கூறினார்.

### பெண் குழந்தை விகிதம் குறைவு

22 மாநிலங்கள் மற்றும் ஐந்து யூனியன் பகுதிகளில் பெண் குழந்தைகளின் பிறப்பு விகிதம் வெகுவாகக் குறைந்துள்ளது. நாட்டில் சராசரியாக 100 ஆண் குழந்தைகளுக்கு 914 பெண் குழந்தைகள் உள்ளன. மிகக் குறைந்த அளவில் ஹரியானாவில் 830 ஆகவும் பஞ்சாபில் 846 ஆகவும் ஜம்முகாஷ்மீரில் 859 ஆகவும் இருக்கிறது. ஆண் குழந்தைகளைவிட பெண் குழந்தை மரணம் தான் இந்தியாவில் அதிகமாக உள்ளது. பெண் குழந்தை வளர்ப்பில் காட்டும் அக்கறையின்மை மற்றும் சமூக பொருளாதாரக் காரணங்களே இதற்கு முக்கியக் காரணிகளாக உள்ளன. 93 மருத்துவரின் இக்குற்றங்களுக்காக தண்டிக்கப்பட்டதில், பதினைந்து பேரின் மருத்துவப் பதிவு மட்டுமே ரத்து செய்யப்பட்டுள்ளது என்பது இந்திய சட்ட அமலாக்கத்தின் பரிதாப நிலையைக் காட்டுகிறது.

**தீக்கதிர் 25.01.2012**

# பள்ளிகளில் பாடப்புத்தகச் சுமையைக் குறைப்பது தொடர்பாக தொடரப்பட்ட வழக்கு

7 செப்டம்பர் 2009 அன்று C. வாணிஸ்ரீ என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் பள்ளி செல்லும் குழந்தைகள் அவர்களது உடல் எடையைவிட 50 சதவீதம் அதிக சுமையை தூக்கி செல்வதினால் அவர்களுக்கு முதுகு வலியும், கூண் விழும் பிரச்சனையும் ஏற்படுகின்றது. இத்தகைய செயல், அனைத்து தனியார் மற்றும் அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு தினந்தோறும் நிகழ்கிறது. ஒவ்வொரு குழந்தைகளின் அவர்களது உடல் நலம் மற்றும் பாதுகாப்புக்கு பள்ளிகள் தான் பொறுப்பு. தமிழ்நாட்டில் 5908 அரசு பள்ளிகளும், சுமார் 3474 தனியார் பள்ளிகளும் இயங்கி வருகின்றன. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் மட்டும் ஒரு கோடி குழந்தைகள் படிக்கின்றனர். பாடத்திட்டத்தின் விரிவாக்கத்தினால் ஒவ்வொரு பாடத்திற்கும் அதற்கான நோட்டு மற்றும் புத்தகம் தேவைப்படுகிறது. இந்த புத்தகம், நோட்டு மட்டுமல்லாமல் மதிய உணவு, தண்ணீர், நூலக புத்தகம் போன்ற அனைத்தும் கொண்டு செல்வதால் உடல் ரீதியாக மட்டுமில்லாமல் மனரீதியாகவும் மிகவும் பாதிக்கப்படுகின்றனர்.

பேருந்தில் ஏற நீண்ட தூரம் புத்தகப் பை சுமையுடன் ஓடி செல்கிறார்கள். இதனால் சில நேரம் அவர்கள் கீழே விழுந்து அடிப்படுவது மற்றும் விபத்துகளினால் உயிரிழப்பும் ஏற்படுகிறது. ஆதலால் பள்ளி செல்லும் குழந்தைகள் அவர்களது எடையைவிட 10 சதவீதத்திற்கு மேலான சுமையை தூக்கக்கூடாது. அதற்கேற்றவாறு பள்ளியில் தினப் பாடத்திட்டம் அமைய வேண்டும், குழந்தைகளது உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தார். மேலும் அத்துடன் மனுதாரர் 6.8.2009 தேதியன்று புத்தகசுமை, அதனால் ஏற்படும் விளைவுகள் மற்றும் அனைத்து பள்ளிகளிலும் முறையான கழிவறை மற்றும் தண்ணீர் வசதி கிடைக்க வேண்டும் என்றும் இயக்குநர், பள்ளிக் கல்வித்துறை, இயக்குநர், மெட்ரிகுலேஷன் பள்ளி கல்வித்துறைக்கு அவர்களுடைய வழக்குரைஞர் மூலம் சட்டரீதியாக (Legal Notice) மனு அனுப்பியிருந்தும் அதன்மேல் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று கூறியிருந்தார். உயர்நீதிமன்றத்தில் இந்த வழக்குத் தொடர்ந்த விவரம் பத்திரிகையின் வாயிலாக 3.11.2009 அன்று தெரியவந்ததின் அடிப்படையில் திரு. ஆசி பெர்ணான்டஸ், மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பின் இயக்குநர் இந்த வழக்கில் 15 டிசம்பர் 2009 அன்று வழக்குட்படுத்தல் தாக்கல் செய்தார், (Implead Petition). அதில், பாடப்புத்தகச் சுமை குறித்து இரண்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 1) 15.7.1993 அன்று பேராசிரியர் யாஷ்பால் தலைமையில் 8 பேர் அடங்கிய குழு மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் (Ministry of Human Resource Development) அமைத்த தேசிய ஆலோசனைக்குழுவின் (National Advisory Commity) அறிக்கை ("Learning without burden") 2) தமிழக அரசால் திரு. வி.ஏ. சிவஞானம் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்நிலைக் குழுவின் அறிக்கை ஆகிய இந்த இரண்டு அறிக்கைகளும் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. இதன் அடிப்படையில் 24.03.2010 அன்று சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுதாரர் தாக்கல் செய்த அந்த இரண்டு அறிக்கைகளையும் செயலாளர், கல்வித்துறைக்கு உடனே அனுப்ப வேண்டும் என்றும் அந்த அறிக்கைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து 3 மாதத்திற்குள் தெரிவிக்க வேண்டும் என்றும் ஆணையிட்டது. இந்த உயர்நீதிமன்ற ஆணையின் மீது கல்வித்துறையால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாததால் 15 நவம்பர் 2011 அன்று நீதிமன்ற அவமதிப்பு வழக்கு உயர்நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கு, விசாரணைக்கு வந்தபோது அரசுத் துறை சார்ந்த வழக்குரைஞர் நான்கு வார கால அவகாசம் கேட்டதின் பெயரில் நீதிபதி நான்கு வாரத்திற்கு வழக்கை ஒத்தி வைத்தார்.

தமிழக அரசு 12.12.2011 அன்று "குழந்தை பருவத்தில் தேவைக்கு அதிகமாக புத்தக சுமையைத் தூக்குவதால் ஏற்படும் உடல் நலக் குறைபாடுகளைக் குறைக்கும் நோக்கத்துடன், வரும் கல்வியாண்டு முதல் இப்புத்தகச்சுமையைக் குறைக்கும் வகையில் தமிழ்நாட்டில் முன் பருவ முறை, அதாவது (Trimester Pattern) அறிமுகப்படுத்தப்படும் என்ற ஒரு அரசாணை (நிலை) எண். 204 வெளியிட்டுள்ளது.

## ‘‘குழந்தைப் பருவத்தில் தேவைக்கு அதிகமாக புத்தகச்சுமையைத் தூக்குவதால் ஏற்படும் உடல்நலக் குறைபாடுகளைக் குறைக்கும் நோக்கத்துடன், வரும் கல்வியாண்டு முதல் இப்புத்தகச் சுமையைக் குறைக்கும் வகையில் தமிழ்நாட்டில் முப்பருவ முறை, அதாவது Trimester pattern அறிமுகப்படுத்தப்படும்.

### சுருக்கம்

**பள்ளிக் கல்வி – மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிவிப்பு – முழுமையான தொடர் – மதிப்பீட்டுடன் கூடிய முப்பருவ பாடத்திட்டத்தினை செயல்படுத்துதல் – பருவத்திற்கு ஏற்ப – பாடநூல்களைப் பிரித்து அச்சிடுதல் – ஆணை வெளியிடப்படுகிறது.**

**அரசாணை (நிலை) எண். 204**

நாள்: 12.12.2011
திருவள்ளுவர் ஆண்டு 2042
கார்த்திகை 26
படிக்கப்பட்டவை:–

1. 110வது விதியின் கீழ் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிவிப்பு நாள் 26.08.2011.
2. அரசாணை (நிலை) எண்.143, பள்ளிக்கல்வி (வி) துறை, நாள் 19.09.2011.
3. ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்க கடித எண். 4914/ஈ2/2011, நாள் 22.11.2011.

**ஆணை:–**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், 110வது விதியின் கீழ் 26.08.2011 அன்று கீழ்க்கண்டவாறு அறிவிப்பு செய்துள்ளார்கள்:–

‘‘குழந்தைப் பருவத்தில் தேவைக்கு அதிகமாக புத்தகச்சுமையைத் தூக்குவதால் ஏற்படும் உடல்நலக் குறைபாடுகளைக் குறைக்கும் நோக்கத்துடன், வரும் கல்வியாண்டு முதல் இப்புத்தகச் சுமையைக் குறைக்கும் வகையில் தமிழ்நாட்டில் முப்பருவ முறை, அதாவது **Trimester pattern** அறிமுகப்படுத்தப்படும். முழுக் கல்வியாண்டிற்குரிய பாடப்புத்தகங்கள் மூன்று பருவங்களுக்கு ஏற்றவாறு பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பருவ முடிவிலும் தொடர் மற்றும் கூட்டு மதிப்பீட்டுடன் கூடிய தேர்வுகள் நடத்தப்படும். இதன்மூலம் மாணவர்களின் கவலை, அச்சம், மன அழுத்தம் ஆகியவை பெரிதும் குறைக்கப்படுவதுடன் பள்ளி செல்லும் குழந்தைகளுக்குப் புத்தகச் சுமையினால் ஏற்படும் இன்னல்கள் நீக்கப்படும்’’

**2.** மேற்காணும் அறிவிப்பின்படி, மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், முழுமையான தொடர் மதிப்பீட்டுமுறை **(Continuous and Comprehensive Evaluation)** யினைச் செயல்படுத்துவது குறித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

**3.** மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர், வரும் கல்வியாண்டில் (2012–2013) பாடநூல்களை மூன்றாகப் பிரித்து ஒவ்வொரு பருவத்திற்கும் ஏற்ப பாடநூல்கள் வெளியிடுவது தொடர்பாகக் கீழ்க்கண்டவாறு கருத்து தெரிவித்துள்ளார்.

(i) பாடநூல்களை மூன்றாகப் பிரிக்க ஒன்று முதல் எட்டு வகுப்புகளுக்கு நடைமுறையில் உள்ள பாடநூல் பக்கங்களைக் கொண்டு கணக்கிடும்போது கீழ்க்கண்டவாறு பாடநூல்களைப் பிரிக்கலாம்.

| நடைமுறையில் உள்ளவை | | | | மாற்றியமைக்கப்பட வேண்டியவை | |
|---|---|---|---|---|---|
| வ. எண் | வகுப்பு | பாடப் புத்தகங்களின் எண்ணிக்கை | பாடப் புத்தகங்களின் மொத்த பக்க எண்ணிக்கை | ஒருங்கிணைக்கப் பட்ட பாடநூல்கள் (ஒவ்வொரு பருவத்திற்கும்) | ஒருங்கிணைக்கப்பட்ட பாடநூலின் பக்கங்கள் தோராயமாக (முழுமையான தொடர் மதிப்பீடு இணைப்புடன்) ஒவ்வொரு பருவத்திற்கும் |
| 1. | I | 4 | 368 | 1 | 138 |
| 2. | II | 4 | 432 | 1 | 154 |
| 3. | III | 5 | 640 | 1 | 228 |
| 4. | IV | 5 | 632 | 1 | 225 |
| 5. | V | 5 | 680 | 1 | 243 |
| 6. | VI | 5 | 608 | 1 | 243 |
| 7. | VII | 5 | 1024 | 2 | 190 |
| 8. | VIII | 5 | 1152 | 2 | 220 |

(ii) இவ்வாறு பாடநூல்களை ஒன்று, முதல் ஆறு வகுப்புகளுக்கு ஒரு பருவத்திற்கு ஓர் ஒருங்கிணைக்கப்பட்ட பாடப்புத்தகம் வீதம் மூன்று பருவங்களுக்கும் மாணவர்களுக்கு வழங்கலாம்.

(iii) ஒன்று, இரண்டு வகுப்புகளில் தமிழ், ஆங்கிலம், கணக்கு, சூழ்நிலையில் ஆகிய நான்கு பாடங்களும் ஒருங்கிணைக்கப்பட்டிருக்கும். மூன்று, நான்கு, ஐந்து மற்றும் ஆறு வகுப்புகளில் தமிழ், ஆங்கிலம், கணக்கு, அறிவியல், சமூக அறிவியல் ஆகிய ஐந்து பாடங்கள் ஒருங்கிணைக்கப்பட்டிருக்கும்.

(iv) ஏழு மற்றும் எட்டு வகுப்புகளில் தமிழ், ஆங்கிலத்தை தொகுதி–I எனவும், கணக்கு, அறிவியல், சமூக அறிவியலைத் தொகுதி–II எனவும் ஒரு பருவத்திற்கு இரண்டு புத்தகங்களாக வெளியிடலாம்.

(v) தமிழ்வழி (Tamil Medium), ஆங்கில வழி (English Medium) ஆகிய இரண்டு வழிகளுக்கும் மற்றும் சிறுபான்மை மொழிகளுக்கும் இவ்வாறே மேற்கண்ட நடைமுறைகளைப் பின்பற்றலாம்.

(vi) சிறுபான்மை மொழிப்பாடங்களில் தமிழ், ஆங்கிலம் தவிர பிற பாடங்கள் அந்தந்த மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு சேர்த்து அளிக்கலாம்.

(vii) சிறுபான்மை மொழி மாணவர்களுக்கு அந்தந்த மொழி சார்ந்த மொழிப்பாடநூல் (Reader) தனியாக வழங்கலாம். அதை மூன்றாகப் பிரிக்காமல், ஆண்டிற்கு ஒரு புத்தகமாக தற்போது நடைமுறையில் உள்ளதைப் போலவே வழங்கலாம்.

(viii) பாடப்புத்தங்களை A4 அளவில் அச்சிடுவதன் மூலம் பாடவாரியாக ஒருங்கிணைப்பது எளிதாக அமையும்.

(ix) ஒன்பது, பத்து வகுப்புகளுக்கு முப்பருவமுறை 2012–2013ஆம் கல்வியாண்டில் அறிமுகப்படுத்தப்படவில்லை என்பதால் பழைய முறையினைப் பின்பற்றி பாடநூல்களை அச்சிட்டு வழங்கலாம்.

3. மேலே பத்தி 3–ல் உள்ள ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து அதனை ஏற்கலாம் எனக் கருதி, அவ்வாறே மேலே பத்தி 3ல் இனம் (i) முதல் (ix) வரை

தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துருவினை ஏற்று ஆணையிடுகிறது. மேலும், முழுமையான தொடர் மதிப்பீட்டுடன் **(Continuous and Comprehensive Evaluation)** கூடிய முப்பருவ பாடத்திட்டத்தை **(Trimester System)** செயல்படுத்திடவும், அதற்கேற்ப பருவத்திற்கு ஏற்ப பாடநூல்களைப் பிரித்து அச்சிடவும் தமிழ்நாடு பாடநூல் கழகத்திற்கு அனுமதி வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**தி. ஸ்ரீ. ஸ்ரீதர்,**
அரசு கூடுதல் தலைமை செயலாளர்

பெறுநர்
இயக்குநர்,
ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி இயக்ககம், சென்னை – 6.
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு பாடநூல் கழகம்,
சென்னை – 6.
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை – 6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை – 6.
மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநர்,
சென்னை – 6.
மாநில திட்ட இயக்குநர்,
அனைவருக்கும் கல்வி இயக்ககம், சென்னை 6.
கூடுதல் திட்ட இயக்குநர்,
அனைவருக்கும் இடைநிலைக் கல்வி,
சென்னை 6.
தலைவர்,
ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை 6.
இயக்குநர்,
பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம்,
சென்னை 6.
அரசு தேர்வுகள் இயக்குநர், சென்னை 6.

நகல்
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம்,
சென்னை 9.
மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை
அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை 9.
பள்ளிக் கல்வித்துறை கூடுதல் தலைமை செயலாளரின்
நேர்முக உதவியாளர், சென்னை 9.
பள்ளிக் கல்வித் (வி)துறை சென்னை – 9.

ஆணைப்படி அனுப்படுகிறது//

பிரிவு அலுவலர்

# நிறைவேறாத இலட்சியம்

– ஹர்ஷ் மந்தர்

அதிகாரப்பூர்வமான தகவலின்படி, அல்லது அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ள புள்ளிவிவரங்களின் படி நமது தொழிலாளர் சந்தையில் ஐம்பது லட்சம் சிறார்கள் இருக்கிறார்கள். ஆனால் இது போன்ற குழந்தை தொழிலாளர்களின் உண்மையான எண்ணிக்கை இதைப்போல் நான்கு மடங்குக்கு மேல் இருக்கக்கூடும். ஒரு சுதந்திர நாடு என்ற முறையில் இவர்களின் எதிர்காலத்தை நாம் பாழாக்கி, அவர்களை வஞ்சித்துக்கொண்டிருக்கிறோம். குழந்தைகள் அல்லது சிறார்கள் பள்ளிக்குச் செல்ல வேண்டிய, அல்லது விளையாட்டு மைதானத்தில் இருக்க வேண்டியதற்குப் பதிலாக அவர்கள் தொழிற்சாலைகளிலும், பண்ணைகளிலும், செங்கற்சூளைகளிலும், சுரங்கங்களிலும் மற்றவர்களது வீடுகளிலும், நகரங்களின் குப்பை கொட்டும் மைதானங்களிலும் தம் வாழ்வைத் தொலைத்து விட்டுத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். இந்த விசயத்தில் பொது மக்களாகிய நாம் அனைவரும் இக்குழந்தைகளுக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய கல்வி, விளையாட்டு, ஓய்வு, ஆரோக்கியமான வளர்ச்சி மற்றும் கவலைகள் இல்லாத குழந்தைப் பருவம் ஆகிய உரிமைகளைத் தட்டிப்பறிப்பதில் மிக ஒற்றுமையாகக் காரியமாற்றுகிறோம். நமது நாட்டின் மிகச்சிறந்த ஜனநாயகமுறை, அதனோடு இணைந்த மிகச்சிறந்த ஒளிவீசும் பொருளாதார வளர்ச்சி இவற்றுக்கிடையே இன்னமும் கூட நாம் குழந்தைத் தொழிலாளர் முறையை சமூகரீதியாக, சட்ட ரீதியாக நீடிக்க அனுமதித்துக் கொண்டிருப்பது, நமது மனசாட்சிக்கே ஒவ்வாத ஒன்றாகும்.

நமது இந்தியச் சட்டங்கள், பெரும்பாலான குழந்தைத் தொழிலாளர் முறைமைகள் அனுமதிக்கத்தக்கவையாக வரையறுத்துள்ளன. 14 வயது வரை உள்ள குழந்தைகள் செய்யக் கூடாத அபாயகரமானவையென ஒரு சிலவற்றை மட்டுமே நமது சட்டங்கள் தடை செய்கின்றன. 2006ல் தான் வீட்டுப் பணியாட்களாக சிறார்களை பணிமர்த்துவது சட்டவிரோதம் எனத் தடை செய்யப்பட்டது. அதற்கு ஐந்தாண்டுகள் முன்னதாக சிறார்கள் குப்பை பொறுக்கும் பணியில் ஈடுபடுத்தப்படக்கூடாது எனச் சட்டமியற்றப்பட்டது. ஆனால் இவற்றை மீறுவோருக்கு குறைந்தபட்ச அபராதமே விதிக்கப்படுகிறது. அதிலும் இவ்வளவு பெரிய நமது நாட்டில் இத்தகைய குற்றமிழைத்தோர் மீது எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கைகளின் எண்ணிக்கை ஆண்டொன்றுக்கு சில ஆயிரங்கள் என்ற அளவிலேயே இது அமலாக்கப்படுகிறது. 14 வயது நிறைவடையாத குழந்தைகள் எந்தவிதமான பணியிலும் ஈடுபடுத்தக்கூடாது என்ற உறுதியான சட்டமேதும் நமது நாட்டில் இல்லை.

### அதிர்ச்சியூட்டும் எண்ணிக்கைகள்:–

மிகச் சமீபத்தில் தொகுக்கப்பட்ட புள்ளி விவர அறிக்கைகளின்படி நமது நாட்டில் ஏறத்தாழ ஐம்பது இலட்சம் குழந்தைத் தொழிலாளர்கள் பொருளாதார ரீதியாக நமது தொழிலாளர் சந்தையில் இணைந்து பணியாற்றுகிறார்கள். நமது நாட்டில் 3 முதல் 14 வயது வரை உள்ள குழந்தைகளில், இத்தகைய குழந்தைத் தொழிலாளர்கள் இரண்டு சதவீதம் ஆவர். நாட்டில் உள்ள குழந்தைத் தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை அரசு குறித்துள்ள எண்ணிக்கையைவிட மிக அதிகமாக இருக்கும் என குழந்தைகள் உரிமைகளுக்காகப் போராடுவோர் உறுதியாகக் கூறுகின்றனர். ஏனெனில் பள்ளியின் வருகைப் பதிவேட்டில் இல்லாத, அல்லது பள்ளிக்குச் செல்லாத ஒரு குழந்தை மறைமுகமாக குழந்தைத் தொழிலாளியாகத்தான் பணியாற்றும். அவர்கள் தமது வீட்டில் உள்ள தமக்குப் பின்னால் பிறந்த இளம் குழந்தைகளைப் பாதுகாக்கிறார்கள். தமது வீட்டைப் பராமரிக்கிறார்கள். பெற்றோருக்கு வயல் வேலைகளில் உதவி செய்கிறார்கள், வீட்டு அளவிலான தொழில்களிலும், வியாபாரத்திலும் பெற்றோருக்குத் துணையாகச் செயல்படுகிறார்கள். எனவே, தற்போது கணக்கிடப்பட்டுள்ளதைக் காட்டிலும் இதுபோன்ற குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை நான்கு மடங்குக்கும் கூடுதலாக இருக்கும் என உறுதியாகக் கூற இயலும்.

கடந்த பத்தாண்டு காலத்தில் பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளின் எண்ணிக்கை உயர்ந்து வருவதாகவும் இளம் வயதிலேயே வேலைக்குச் செல்லும் குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைந்து வருவதாகவும் தகவல்கள் வெளியாகி வருவது நம்பிக்கையூட்டுவதாக இருக்கிறது. ஆனால், இந்த எண்ணிக்கை குறித்து நாம் மிக விழிப்புணர்வோடு இருந்து வருவது மிக அவசியம். ஏனெனில் இன்றைய அதிவேகப் பொருளாதார வளர்ச்சிக்காலத்தில், தொழில் முறை என்பது பழைய வழக்கமான முறைகளில் இன்றி புதிய வெவ்வேறு மறைமுகமான வழிகளாக மாறி வருவது தீவிரமடைந்துள்ளது. தொழிற் கூடங்களில் பணியிடப்

பாதுகாப்பு தொடர்பான நடைமுறைகளைப் பின்பற்றுவதிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காகவும், தொழிலாளர் பாதுகாப்பு சம்மந்தமாக தனது பொறுப்புகளைத் தட்டிக் கழிக்கும் விதத்திலும் பெரிய தொழிற்சாலை நிர்வாகங்கள் தமது ஆலைக்குள் செய்ய வேண்டிய உற்பத்திப்பணிகள் பலவற்றை, தொழிலாளர்களிடம் குறைந்த கூலிக்கு அவர்கள் வீட்டிலேயே வைத்து செய்து கொணருமாறு துணை ஒப்பந்த (Sub – Contract) அடிப்படையில் அளித்து வருகின்றன. இதேபோன்ற பல பணிகள் குழந்தைகள் தமது வீட்டிலேயே வைத்து செய்யும் வகையில் மாற்றியளிக்கப்படுகின்றன. இதன் விளைவாகக் குழந்தைகள் தமக்கு ஐந்து அல்லது ஆறு வயது நிறைவடையாததற்கு முன்னதாகவே வேலை செய்தாக வேண்டிய கட்டாயச் சூழல் ஏற்பட்டுவிடுகிறது. இதுபோன்ற குழந்தைத் தொழிலாளர்கள் வழக்கமான கணக்கெடுப்புகளில் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை.

அபாயகரமான தொழிற்சாலைகளில் கூட குழந்தைத் தொழிலாளர்களைப் பணியமர்த்துவதைத் தடை செய்கிற அளவுக்கேனும் சட்டம் வலுவாக இல்லை. அதிகாரப்பூர்வமாகக் கணக்கெடுக்கப்பட்டுள்ள குழந்தைத் தொழிலாளர்களில், மூன்றிலொரு பங்குக் குழந்தைத் தொழிலாளர்கள் அபாயகரமான பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். இவ்வாறான அபாயகரமான தொழில்களில் பணியாற்றும் குழந்தைகளில் 53 விழுக்காடு குழந்தைகள் போதைப்பாக்கு, பீடி, சிகரெட் தொழிற்சாலைகள் ஆகியவற்றோடு கூடவே கட்டிடத் தொழிலாளர்களாகவும், வீட்டுப் பணியாளர்களாகவும் வேலை செய்கின்றனர். புள்ளி விவரத்தின்படி பதிவு செய்யப்பட்ட குழந்தைத் தொழிலாளர்களில் 72 விழுக்காடு குழந்தைகள் விவசாயத் தொழிலில் உள்ளனர். நாட்டின் மொத்த விவசாயத் தொழிலாளர்களின் எண்ணிக்கையில் இக்குழந்தைகள் 9 விழுக்காடு ஆவர். இக்குழந்தைகள் விவசாயப் பண்ணைகளில் நீண்ட நேரம் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. அதோடு அவர்கள் பூச்சிக்கொல்லி மருந்துகள் மற்றும் இதர வேதிப் பொருட்களையும் சுவாசித்தாக வேண்டிய அபாய நிலையில் உள்ளனர். பெண் குழந்தைகள் பணிக்குச் சென்றாக வேண்டிய நிலை ஏற்பட்டாலோ அவர்கள் தமது 10 அல்லது 12 வயதிற்குள்ளாகவே உடலியல் ரீதியாக, பாலியல் ரீதியாக துன்பங்களை சந்திக்க வேண்டியிருக்கிறது.

நாடு முழுவதும் வறுமையில் வாடிக் கொண்டிருக்கிற சூழலில், அதன் தவிர்க்க முடியாத துணைப் பொருளாகக் குழந்தைத் தொழிலாளர் முறை இருக்கிறது என்ற அதிகார வர்க்கத்தின் சிந்தனைப் போக்கு காரணமாகவே, குழந்தைத் தொழிலாளர் முறை என்ற ஒன்றை சகித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. குருபாதசாமி அவர்களது தலைமையில் 1981–ஆம் ஆண்டு அமைக்கப்படட ஆய்வுக் குழுவானது, தனது அறிக்கையில் ‘‘எவ்வளவுகாலம் வறுமை நீடித்து நிலை கொண்டிருக்கிறதோ, அவ்வளவு காலம் வரையில் குழந்தைத் தொழிலாளர் முறையை முழுமையாக ஒழிக்க முடியாது. எனவே, நாம் குழந்தைத் தொழிலாளர் முறையை சட்டம் இயற்றுவதன் மூலம் ஒழித்துக்கட்டிவிடலாம் என்பது சாத்தியப்பூர்வமான ஆலோசனையல்ல’’ என்று கூறுகிறது. இதுபோன்ற யதார்த்தத்திற்குப் புறம்பான எண்ண வோட்டங்களே குழந்தைத் தொழிலாளர் மீதான நமது அரசின் நிலைபாட்டைத் தீர்மானிக்கின்றன.

### வறுமையும் குழந்தைத் தொழிலாளரும்

குாந்தைத் தொழிலாளர் முறைக்கு மிக முக்கியமான காரணம் வறுமையா அல்லது வேறு ஏதேனும் ஒன்றா என்பதான விவாதம் இன்றும் தொடர்கிறது. வறுமை சூழ்ந்த குடும்பங்களில் தமது குழந்தைகளை வேலைக்கு அனுப்புவதில் கிட்டும் வருவாயே அவர்கள் உயிர்வாழ்வதற்கான ஒரே வழி என வறுமை குறித்து ஆராயும் வல்லுனர்கள் பலர் வாதிடுகின்றனர். பல குழந்தைகள் பண்ணைகளில் வேலை செய்வது, ஆடு, மாடுகளை மேய்ப்பது, வீடு சுத்தம் செய்வதோடு, சமைப்பது, தண்ணீர் கொண்டு வருவது மற்றும் தமக்கு இளைய குழந்தைகளை கவனித்துக் கொள்வது ஆகிய பணிகளில் உள்ளனர். இவர்கள் செய்யும் வேலைக்கு வேலைக்கு எவ்வித ஊதியமும் கிடைப்பதில்லை. ஆனால், இந்த வேலைகள் காரணமாக இவர்களால் பள்ளிக்குச் செல்ல இயலுவதுமில்லை. பல நிகழ்வுகளில் வீட்டின் மூத்த குழந்தைகள் தமக்குப் பின்னுள்ள இளைய குழந்தைகளை நாள் முழுவதும் வைத்துப் பாதுகாத்துப் பராமரிக்க வேண்டிய நிலையில் அவர்கள் பள்ளிக்குச் செல்வதையே கனவாகக் கருதிக் கைவிட வேண்டியுள்ளது. பல மாநிலங்களில் பள்ளிகள் இருக்கும் நிலையும், அங்குள்ள சூழலும் குழந்தைகள் பள்ளிக்குச் செல்வதைத் தவிர்த்து, குழந்தைகள் கல்வியினின்று இடை நிற்கவும், வேலைக்குச் செல்லவும் காரணமாக இருக்கின்றன. வறுமையான குடும்பங்களிலிருந்து பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் தாம் தவறான இடத்திற்கு வந்து சேர்ந்துவிட்டது போல உணர்கின்றன. அவர்களுக்குக் கிட்டும் கல்வியோ அவ்வளவு அதிகமும் அல்ல. காலப்போக்கில் அவர்கள் பள்ளிக்குச் செல்ல மறுத்துவிடுகின்றன. குறைந்தபட்சக் கூலிச் சட்டங்கள் முறையாக அமலாக்கப்பட்டு பெற்றோருக்குப் பணிப்பாதுகாப்பு உறுதி செய்யப்படுமானால், அவர்களது குழந்தைகள் பணிக்குச் செல்வது படிப்படியாகக் குறைந்து, இறுதியில் மறைந்தேவிடும்.

குழந்தைகள் தமது பெற்றோரைச் சூழ்ந்திருக்கும் வறுமை, தம்மையும் பிடிக்காது தவிர்க்க வேண்டுமானால் அவர்கள் பள்ளிக்குச் செல்வது ஒன்றே வழி என குழந்தைகள் உரிமைகளுக்காக வாதாடுவோர் தமது வலிமையான வாதத்தை முன் வைக்கின்றனர். இது குழந்தைகள் தமது இளமைப் பருவத்தை நோக்கிச் செல்லும் கால கட்டத்தில் அவர்களுக்கான பொருளாதார, சமூக ரீதியான வாய்ப்புகளுக்கு வழி கோலுகிறது. குழந்தைகள் வேலைக்குச் செல்வது அவர்களது வாழ்நாள் முழுவதும் குறிப்பிடத்தக்க, பின்னாளில் எந்த வகையிலும் சரிப்படுத்த இயலாத உளவியல், உடலியல் குறைபாடுகளை ஏற்படுத்திவிடுகிறது. ஏனெனில் அவர்களது உடல், அறிவு மற்றும் தீர்மானிக்கும் சக்தி ஆகியவை வளர்ந்து வரும் காலகட்டத்தில், அது அவர்களது பதின்ம வயதுகளின் இறுதியில் கூட (அதாவது 19 வயது நிறைவடையும் வரையில்) தொடரும் நிலையில் அவர்கள் மிக இளம் வயதிலேயே வேலைக்குச் செல்வதால் இளமையிலேயே வயோதிகத் தோற்றம் ஏற்படுவது, விரைவில் உடல் தளர்ந்து விடுவது, அவர்களது இயல்பான உடல் வளர்ச்சி தடைப்படுவது அல்லது குன்றி விடுவது, தொழில் தொடர்பான நோய்களுக்கு ஆட்படுவது, இயல்பான உற்சாகம் குன்றுவது ஆகிய விளைவுகள் ஏற்படுகின்றன. இதுமட்டுமல்லாது கவலையற்ற குழந்தைப் பருவகாலத்து மகிழ்ச்சிகரமான வாழ்க்கையை அவர்கள் முழுமையாக இழந்து விடுகிறார்கள்.

**ஏழைப் பெற்றோர் மீது எந்த வகையிலும் குற்றம் சுமத்துவதோ அல்லது அவர்களை தண்டிப்பதோ தவறாகும். தண்டனை விதிகள் யாவும் குழந்தைகளைப் பணிக்கு அமர்த்தும் முதலாளிகளை நோக்கியதாக இருக்க வேண்டும். சட்ட நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய கடமை அரசாங்கத்தைச் சார்ந்ததாக இருக்க வேண்டும்.**

குழந்தைகள் வேலை செய்வது விலக்கப்பட்டு, பள்ளிக்கு அனுப்பப்படும் அதே வேளையில் பெற்றோருக்கு, ஆண் மட்டுமல்லாது பெண்ணுக்கும் கிடைக்கும் ஊதியத்தின் அளவு உயர்கிறது என்பதை நமது தற்கால அனுபவங்கள் நமக்கு உணர்த்துகின்றன என மிக உணர்ச்சிக் கொந்தளிப்போடு கூறுகிறார் சாந்தாசின்ஹா, அவர் 50,000 குழந்தைகளை வேலையினின்றும் விடுவித்து அவர்கள் முறையான பள்ளிக் கல்விக்குச் செல்வதை வெற்றிகரமாகச் செய்து முடித்திருக்கிறார்.

தொழிலாளர்களின் கூலித் தொகை குறைந்து வருவதற்கு, அதுவும் குறிப்பாக முறைசாரத் தொழில்களில் இந்நிலை ஏற்பட்டதற்குக் குழந்தைத் தொழிலாளர் எண்ணிக்கை மிக அதிக அளவு உயர்ந்து வருவதேயாகும். குழந்தைத் தொழிலாளர் முறை, வயது வந்த தொழிலாளிக்கும் குறைந்த கூலி என்பதான நிலையை உருவாக்கிவிடும். பல நாடுகளில் இளங்குழந்தைகளைப் பாதுகாத்து வளர்ப்பது என்பது உறுதிப்படுத்தப்பட்டு அரசின் தொடர்ந்த கண்காணிப்பின்கீழ் உள்ளது. அந்நாடுகளில் எல்லாம் பெண் குழந்தைகள் வீட்டுப்பணிக்கு அமர்த்தப்படுவதை அனுமதிப்பதில்லை. குழந்தைகளுக்கான உரிமைகள் என்ற நோக்கில் சொல்வதானால், குழந்தைகளுக்கு அளிக்கப்படும் உரிமைகள் ஒவ்வொன்றினாலும் எதிர்காலப் பொருளாதாரத்திலும், சமூகத்திலும், ஆழமான ஆக்கப்பூர்வமான விளைவுகள் ஏற்படுகின்றன. எனவே, ஒவ்வொரு சமூகமும் குழந்தைகளின் உரிமைகளுக்கு முன்னுரிமை அளித்தல் வேண்டும்.

நமது நாட்டின் மத்திய, மாநில அரசுகள், வறுமையை ஒழிப்பது, முறைசாராத் தொழிலாளர்களுக்கான உரிமைகள் யாவற்றையும் முறையாக அமலாக்குவது, சமூகப் பாதுகாப்பை உறுதி செய்வது, குழந்தைப் பராமரிப்பு மையங்களைச் செயல்படுத்துவது, பள்ளிகளில் தரமான, பொருத்தமான கல்வியை அளிப்பது போன்ற பல துறைகளில் தமது கடமையைச் செய்ய மறுத்து தோல்வியைத் தழுவியதே நமது நாட்டில் குழந்தைகள், தொழிலாளர்களாக மாறி வேலை செய்து பிழைக்க வேண்டிய நிலையில் இருப்பதற்கான காரணமாகும். ஆனால், இதையே காரணமாகக் கொள்வதை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள இயலாது. குழந்தைத் தொழிலாளர் முறையை முற்றாக ஒழிப்பதற்கு அரசு ஒரு முழுமையான அணுகுமுறையைக் கையாள வேண்டும். குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிப்பதற்கு சட்டங்கள் இயற்றுவது ஒரு கட்டாயமான வழி. ஆயினும் அது மட்டுமே போதாது. அரசு குழந்தைகளுக்குத் தரமான, பொருத்தமான, பாகுபாடற்றக் கல்வி அளிக்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும். தொழிலாளர் சட்டங்களை அமலாக்க வேண்டும். குழந்தைகள் காப்பகங்களை உருவாக்க வேண்டும். இவையாவற்றுக்கும் மேலாக, குழந்தைகள் எங்கு வளர்கிறார்களோ அங்கு, அவர்களுடைய சொந்த வீடுகளிலிருந்து வறுமையை விரட்டியடிக்கத் தக்க திட்டங்களை நிறைவேற்ற வேண்டும்.

நமது அரசு அலுவலர்களின் ஒரு சிலர், தொழில் ரீதியாக, ஏற்றுமதி சார்ந்து ஒப்பீட்டளவில் பிறநாடுகளைக் காட்டிலும் நமக்குள்ள சாதகமான அம்சங்களைப் பட்டியலிடுகின்றனர். குழந்தைகளைப் பணிக்கு அமர்த்துவதன் மூலம் உற்பத்தி விலையைக் குறைப்பதோடு, குழந்தைகளை வைத்துத் திறமையாக வேலை வாங்குவது, குழந்தைகளின் இலாவகமான, சுறுசுறுப்பான விரல்கள் காரணமாக தொழில் நேர்த்தி ஆகியவை போன்றவை அவை. இதுபோன்ற பொருளியல் அனுகூலங்கள் கூட கேள்விக்குரியவைதாம். குழந்தைகளைப் பணிக்கு அமர்த்துவதன் மூலம் நமக்கு இலாபம் அதிகமானாலும் கூட, நாம் தொடர்ந்து குழந்தைத் தொழிலாளர் முறையை அனுமதிப்போம் எனக் கூறுவதை தார்மீக அடிப்படையில் எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாது. ஏனெனில், குழந்தைகள் இளம் வயதில் பணி செய்வதன் காரணமாக அவர்களுக்கு விரைவில் உடல் நலிவு ஏற்பட்டுவிடுகிறது. அதோடு அவர்கள் உளவியல் அடிப்படையில் பாதிக்கப்பட்டு விடுகிறார்கள். அவர்கள் முறையான கல்விகற்று அதன் மூலம் தமது வறுமையினின்று காலத்தே மீள்வதும், துரிதமான பொருளாதார வளர்ச்சி நோக்கி அடியெடுத்து வைப்பதும் தடைப்பட்டுவிடுகின்றன.

## இது போதாது...

அபாயகரமான தொழில்களில் குழந்தைகளை ஈடுபடுத்துவதை இப்போதுள்ள சட்ட தண்டனை விதிகளின் மூலம் முழுமையாக நிறுத்த வியலாது. இதுபோன்ற குற்றங்களில் ஈடுபடுவோருக்கு மூன்று மாதங்கள் முதல் இரண்டாண்டுகள் வரை சிறைத் தண்டனையளிப்பதோடு கூடவே, 10 முதல் 20 ஆயிரம் ரூபாய் வரையில் அபராதம் விதிப்பதன் மூலமே இது மற்றவர்களுக்கு ஒரு கடுமையான எச்சரிக்கையாக அமையும். இதுபோன்ற குற்றவாளிகள் மீது வழக்கு தொடுக்கப்பட வேண்டும். பிணை விடுதலையும் கூடாது. இவர்களுக்கு தண்டனை உறுதி என்பதாக சட்டம் வகுக்கப்பட வேண்டும். ஆனால், ஏற்கெனவே வறுமை சூழலில் வாடும், குடும்பச் சூழலுக்காகக் குழந்தைகளை வேலைக்கு அனுப்பும் நிலையில் உள்ள ஏழைப் பெற்றோர் மீது எந்த வகையிலும் குற்றம் சுமத்துவதோ அல்லது அவர்களை தண்டிப்பதோ தவறாகும். தண்டனை விதிகள் யாவும் குழந்தைகளைப் பணிக்கு அமர்த்தும் முதலாளிகளை நோக்கியதாக இருக்க வேண்டும். சட்ட நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய கடமை அரசாங்கத்தைச் சார்ந்ததாக இருக்க வேண்டும்.

பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட குழந்தைத் தொழிலாளர்களின் மறுவாழ்வு நடவடிக்கைகளுக்கான திட்டமிடுதலிலும் மிகக் கூருணர்வுமிக்க அணுகுமுறை வேண்டும். பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படும் வகையிலும், நுகர்வோரைக் கவரும் வகையிலும் குழந்தைத் தொழிலாளர் மறுவாழ்வு குறித்து அரசு தக்க நடவடிக்கை வழிமுறைகளைக் கையாள வேண்டும். குழந்தைத் தொழிலாளர் உழைப்பு மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்களைப் புறக்கணிக்குமாறு மக்களிடையே பரப்புரை செய்யலாம். உதாரணமாக அரசு இதுகுறித்து தக்க சான்றுகள் வழங்குவதோ அல்லது அடையாள வில்லைகள், குறியீடுகள் அளிப்பதை செய்யலாம். வீட்டுப்பணிகள், உணவகங்களில் பணியமர்த்துவது உள்ளிட்ட பல்வேறு குழந்தைத் தொழிலாளர் முறைகளுக்கு எதிரான பரப்புரை நடவடிக்கைகளில் பள்ளிக் குழந்தைகளைப் பயன்படுத்தலாம்.

கல்வி பெறும் உரிமையை எல்லாக் குழந்தைகளுக்குமான அடிப்படை உரிமை என்பதாக நமது அரசியல் சட்டத்தில் உரிய மாற்றங்கள் செய்து உறுதிப்படுத்துவதன் மூலம் குழந்தைத் தொழிலாளர் முறை குறித்த எல்லா விவாதங்களுக்கும் ஒரு முடிவை ஏற்படுத்தி விடலாம். ஒவ்வொரு குழந்தையும் முறையான பள்ளிக் கல்வி பெறுவது சட்டத்தின் மூலம் உறுதி செய்யப்படுமானால், அக்குழந்தை அதே வேளையில் பணிக்குச் செல்வது என்பது நடவாது. பள்ளி நேரத்திற்குப் பின்னர் அல்லது விடுமுறைக் காலங்களில் குழந்தைகள் தமது பெற்றோருக்கு வயல் வேலைகளில், வீட்டு அளவிலான தொழில்களில், வனப் பொருட்கள் சேகரிப்பில், அல்லது வியாபாரத்தில் உதவி செய்வதைத் தடை செய்யத் தேவையில்லை. ஆனால், இவை யாவற்றிலும் குழந்தைகள் பள்ளிக்குச் செல்வதை விடுத்தோ, அல்லது குழந்தைகள் பாதுகாப்பைத் தவிர்த்தோ ஈடுபடுத்தப்படுதல் கூடாது.

தற்காலத்தில், குழந்தைகள் கல்வி பெறுவது சட்டப்படியான ஒரு உரிமையாக இருப்பினும் கூட, அரசின் பல்வேறு முயற்சிகளின் பலன்கள் பல குழந்தைகளுக்குக் கிட்டாத நிலை உள்ளது. இவர்களில் புலம் பெயர்ந்த தொழிலாளர்களது குழந்தைகள், கடத்தப்பட்ட, கொத்தடிமையாகவுள்ள, வீடற்று தெருக்களில் வசிக்கும் நிலையிலுள்ள, இளம் வயதிலேயே வேலைக்குச் செல்கிற குழந்தைகள் ஆகியோர் அடங்குவர், இவர்களது குழந்தைப் பருவ உரிமைக்கான, கல்வி பெறும் உரிமைக்கான சூழலை உறுதி செய்வதே உடனடியாக நிறைவேற்ற வேண்டிய, இதுவரை நிறைவேறாத இலட்சியமாக நமது கண் முன்பு உள்ளது.

**ஆதாரம் : *The Hindu* - 20.11.11**

# பள்ளிக் கல்வி -அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் அனைத்து மாணவ/மாணவியர்களுக்கும் ஒரே மாதிரியான புத்தகப் பைகள், கற்றலுக்குத் தேவையான கணித உபகரணப்பெட்டி, வண்ணப்பென்சில்கள் மற்றும் புவியியல் வரைபடங்கள் வழங்குதல் ஆணை வெளியிடப்படுகிறது.

---

## பள்ளிக் கல்வி (எஸ்1) துறை

அரசாணை (நிலை) எண்.12

நாள் : 18.01.2012<br>
திருவள்ளுவர் ஆண்டு 2043<br>
தை–4<br>
படிக்கப்பட்டவை:–

1. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு நாள் 26.8.2011.
2. இணை இயக்குநர் (மேநிக) பள்ளிக் கல்வி இயக்ககம், சென்னை–6. கடிதம் ந.க.எண். 1/பிசி/2011 நாள் 28.9.2011.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழ் 26.8.2011 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கீழ்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்.

“1985 ஆம் ஆண்டிலிருந்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளுக்கு இலவசமாக பாடப்புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. மாணவர்களிடம் இருக்கும் ஏற்றத் தாழ்வுகளை நீக்கும் நல்லெண்ணத்துடன் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் அனைத்து மாணவ மாணவியர்களுக்கும் ஒரே மாதிரியான புத்தகப் பைகள், கற்றலுக்குத் தேவையான கணித உபகரணப்பெட்டி, அதாவது Geometry Box, கிராமப்புற மாணவ மாணவியர்களுக்கு இதுவரை கிடைக்கப் பெறாத வண்ணப் பென்சில்கள் மற்றும் புவியியல் வரைபடங்கள் போன்றவை வரும் கல்வியாண்டு முதல் வழங்கப்படும்”.

2. மேற்காண் அறிவிப்பு தொடர்பாக விரிவான கருத்துருவினை செலவின விவரங்களுடன் அரசுக்கு அனுப்பி வைக்குமாறு இணை இயக்குநர் (மேநிக) கேட்டுக் கொள்ளப்பட்டார். அதன் அடிப்படையில் இணை இயக்குநர் (மேநிக) அவர்கள் அரசு /அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவ / மாணவியர்களுக்கும் ஒரே மாதிரியான புத்தகப் பைகள், கணித உபகரணப்பெட்டி (Geometry box) வண்ணப்பென்சில்கள் மற்றும் புவியியல் வரைபடங்கள் ஆகியவற்றை 2012–2013–ம் கல்வியாண்டு முதல் கீழ்க்கண்டவாறு வழங்கலாமென தெரிவித்துள்ளார்.

**புத்தகப்பை:**

1 முதல் 3 வகுப்புகள் வரை – சிறிய அளவு (Small size)<br>
4 முதல் 7 வகுப்புகள் வரை – நடுத்தர அளவு (Middle size)<br>
8 முதல் 12 வகுப்புகள் வரை  பெரிய அளவு (Large size)

இம்மூன்று அளவுகள் கொண்ட புத்தகப் பைகளின் தோராய விலை ரூ.75, ரூ.100 மற்றும் ரூ.125 என மதிப்பிடலாம். இதனால் 92,28,374 மாணவ / மாணவியர் பயன்பெறுவர்.

### கணித உபகரணப் பெட்டி:

6 முதல் 10 வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு இலவச கணித உபகரணப் பெட்டிகள் வழங்கலாம். ஒரு கணித உபகரணப் பெட்டியை மாணவ / மாணவியர்கள் இரண்டு கல்வி ஆண்டுகளுக்கு பயன்படுத்தலாம். எனவே, ஒவ்வொரு கல்வியாண்டிலும் 6, 8, 10 வகுப்புகள் பயிலும் மாணவ/ மாணவியர்களுக்கு இலவச கணித உபகரணப் பெட்டிகள் வழங்கலாம். இதன் தோராய விலை ரூ.35 என மதிப்பிடலாம். இதனால் 46,01,572 மாணவ/மாணவியர் பயன்பெறுவர்.

### வண்ணப்பென்சில்கள்:

1 முதல் 5 வகுப்புகள் வரை பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு வண்ணப் பென்சில்கள் வழங்கலாம். இவ்வகை வண்ணப் பென்சில்கள் அளவில் பெரியதாகவும் (long size) இரு முனைகளில் இரு வெவ்வேறு வண்ணங்கள் கொண்டதாகவும் இருக்கும். வண்ணப் பென்சில்கள் அடங்கிய பெட்டி ஒன்றுக்கு உத்தேசமாக ரூ.20 என மதிப்பிடலாம். இதனால் 35,00,556 மாணவ/மாணவியர் பயன்பெறுவர்.

### புவியியல் வரைபடங்கள்:

முதல் ஆண்டில் 6 முதல் 10 வகுப்புகள் வரை பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு புவியியல் வரைபடங்கள் வழங்கலாம். இரண்டாம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் 6–ம் வகுப்பு மாணவ / மாணவியர்களுக்கு மட்டும் வழங்கலாம். ஒரு புவியியல் வரைபடத்தின் தோராய விலை மதிப்பு ரூ.50 எனக் கொள்ளலாம். இப்புவியியல் வரைபடங்கள் தமிழ்நாடு பாடநூல் கழகம் மூலம் அச்சிட்டு வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்று தெரிவித்துள்ளார். இதனால் 46,01,572 மாணவ/மாணவியர் பயன்பெறுவர்.

3) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கிணங்க 2012– 2013ஆம் கல்வியாண்டில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவ / மாணவியர்களுக்கும் ஒரே மாதிரியான புத்தகப் பைகள், கணித உபகரணப்பெட்டி (Geometry box), வண்ணப்பென்சில்கள் மற்றும் புவியியல் வரைபடங்கள் ஆகியவைகளை கீழ்க்கண்டவாறு வழங்கலாம் என முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

### (I) புத்தகப்பைகள்:

1 முதல் 3 வகுப்புகள் வரை – சிறிய அளவு (Small size)
4 முதல் 7 வகுப்புகள் வரை – நடுத்தர அளவு (Middle size)
8 முதல் 12 வகுப்புகள் வரை – பெரிய அளவு (Large size)

இம்மூன்று அளவுகள் கொண்ட புத்தகப் பைகள் வழங்கப்படும்.

### (ii) கணித உபகரணப் பெட்டி:

6 முதல் 10 வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு இலவச கணித உபகரணப் பெட்டிகள் வழங்கலாம். ஒரு கணித உபகரணப் பெட்டியை மாணவ / மாணவியர்கள் இரண்டு கல்வியாண்டுகளுக்கு பயன்படுத்தலாம். எனவே, ஒவ்வொரு கல்வியாண்டிலும் 6,8,10 வகுப்புகள் பயிலும் மாணவ/ மாணவியர்களுக்கு கணித உபகரணப் பெட்டிகள் வழங்கப்படும்.

### (iii) வண்ணப்பென்சில்கள்:

1 முதல் 5 வகுப்புகள் வரை பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு வண்ணப் பென்சில்கள் வழங்கலாம். இவ்வகை வண்ணப் பென்சில்கள் அளவில் பெரியதாகவும் (long size) இரு முனைகளில் இரு வெவ்வேறு வண்ணங்கள் கொண்டதாகவும் இருக்கும். வண்ணப் பென்சில்கள் அடங்கிய பெட்டி ஒன்று வழங்கப்படும்.

### (iv) புவியியல் வரைபடங்கள்:

2012–2013ஆம் கல்வி ஆண்டில் 6 முதல் 10 வகுப்புகள் வரை பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு புவியியல்

வரைபடங்கள் வழங்கலாம். 2013–14 கல்வி ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் 6–ம் வகுப்பு மாணவ / மாணவியர்களுக்கு மட்டும் வழங்கப்படும்.

4) புவியியல் வரைபடங்களை தமிழ்நாடு பாடநூல் கழகம் மூலம் அச்சிட்டு வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக்கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

5) இத்திட்டத்தினை சரியாக செயல்படுத்த ஏதுவாக முறையான கொள்முதல் நடைமுறைகளை (Appropriate Procurement Procedure) பின்பற்றி கல்வியாண்டின் தொடக்கத்திலேயே கற்றலுக்கான பொருட்களை வழங்கிட ஏதுவாக கொள்முதல் நடவடிக்கைகளை முடித்திட பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநர் அறிவுறுத்தப்படுகின்றனர்.

6) இத்திட்டத்தினை 2012–13 கல்வி ஆண்டு முதல் செயல்படுத்திட தேவையான நிதியினை வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கீடு செய்திட ஏதுவாக கருத்துருவினை நிதித் (கல்வி II) துறைக்கு சமர்ப்பிக்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநர் அறிவுறுத்தப்படுகின்றனர்.

7) இந்த அரசாணை நிதித் துறையின் இசைவினை அதன் அ.சா. எண். 01/DS(KM)/ Edn-II/2011, நாள்: 04.01.2012 ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தி. ஸ்ரீ. ஸ்ரீதர்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர்,
சென்னை–6
தொடக்கக் கல்வி இயக்குநர்,
சென்னை–6
மாநில திட்ட இயக்குநர்
அனைவருக்கும் கல்வி இயக்கம், சென்னை–6
ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி (ம) பயிற்சி இயக்குநர்,
சென்னை – 6

நகல்
மாண்புமிகு முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சரின்
நேர்முக உதவியாளர், சென்னை–9
அரசு கூடுதல் தலைமைச் செயலரின் தனிச்செயலர்,
பள்ளிக் கல்வித் துறை, சென்னை–9
நிதித் (வரவு/செலவு/பொது–I, II) துறை, சென்னை–9

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//
பிரிவு அலுவலர்.

# சத்தான உணவு கிடைக்காததால்
# 42% குழந்தைகள் எடை குறைவு நாட்டுக்கே கேவலம்

**தாயின் கல்வி தகுதி, குடும்பத்தின் பொருளாதார நிலை, சுகாதார வசதி, வீட்டில் பெண்களின் நிலை, தாய்பால் கொடுத்தல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் குழந்தைக்கு சத்து குறைபாடு ஏற்படுகிறது.**

ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளில் 42 சதவீதம் பேர் சத்து குறைபாட்டால் சராசரி எடையைவிட குறைவான எடையோடு இருப்பது ஆய்வில் தெரிய வந்துள்ளது. இது நாட்டுக்கே கேவலமான விஷயம் என்று பிரதமர் மன்மோகன் சிங் வேதனை தெரிவித்துள்ளார். பட்டினி மற்றும் சத்து குறைபாடு உள்ள குழந்தைகள் குறித்து 9 மாநிலங்களில் உள்ள 112 மாவட்டங்களில் நந்தி அறக்கட்டளை ஆய்வு நடத்தியது. இந்த ஆய்வின் முடிவுகளை டெல்லியில் நேற்று நடந்த விழாவில் பிரதமர் மன்மோகன் சிங் பேசியதாவது:

இந்திய பொருளாதாரம் வியக்கத்தக்க அளவு வளர்ச்சி அடைந்து வருகிறது. ஆனாலும், நாட்டில் சத்து குறைவு காரணமாக பாதிக்கப்படும் குழந்தைகள் எண்ணிக்கை அதிகமாக உள்ளது கவலை அளிக்கிறது. சத்து குறைபாடு உள்ள குழந்தைகளின் எண்ணிக்கை எதிர்பார்த்த அளவு வேகமாக குறையவில்லை. கடந்த 7 ஆண்டுகளின் புள்ளி விவரப்படி, 6 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் 42 சதவீத குழந்தைகள் சத்து குறைபாடு காரணமாக குறைவான எடை கொண்டதாக இருக்கின்றன. இந்த புள்ளிவிவரம் நாட்டுக்கே கேவலம். இந்த அளவுக்கு சத்து குறைபாட்டால் குழந்தைகள் பாதிக்கப்பட்டிருப்பது வேதனை அளிக்கிறது. தாயின் கல்வி தகுதி, குடும்பத்தின் பொருளாதார நிலை, சுகாதார வசதி, வீட்டில் பெண்களின் நிலை, தாய்பால் கொடுத்தல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் குழந்தைக்கு சத்து குறைபாடு ஏற்படுகிறது. குாந்தைகளிடையே சத்து குறைபாட்டை போக்க ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், குழந்தைகளிடையே சத்து குறைபாட்டை போக்க அந்த திட்டம் மட்டுமே போதாது என்பதை புள்ளி விவரம் காட்டுகிறது. குழந்தைகளிடையே சத்துகுறைபாடு அதிகம் உள்ள மாவட்டங்களில் சிறப்பு கவனம் செலுத்த வேண்டியது அவசியம். கல்வி சுகாதாரம், குடிநீர் – சத்துணவு இடையே உள்ள தொடர்பை புரிந்து கொண்டு புதிய திட்டங்களை தீட்ட வேண்டும். இவ்வாறு மன்மோகன் சிங் கூறினார்.

**– தினகரன் 11.01.2012**

### பிறப்பிலிருந்தே பிரச்சனைக்குரிய குழந்தைகள்

**குழந்தைகள் சத்துக் குறைவாக இருப்பதைப் பற்றிய முதன் முதல் கணக்கெடுப்பு (சர்வே), சில அதிர்ச்சிகரமான எண்ணிக்கையை கோடிட்டுக் காட்டுகிறது. இதோ சில உண்மைகள்**

| | | **பிறக்கும் குழந்தையின் எடை – ஒரு முக்கியப் பிரச்சனை** | **தாயின் கல்வியோடு தொடர்புடையவை:** |
|---|---|---|---|
| **42%** குறிப்பிட்ட 100 மாவட்டங்களில் எடை குறைவான குழந்தைகள் உள்ளனர். | **59%** குறிப்பிட்ட 100 மாவட்டங்களில் உள்ள வளர்ச்சி குன்றிய, அதாவது தீவிர சத்துக் குறைவான குழந்தைகள் | பிறக்கும்போது 2.5 கிலோவுக்கும் குறைவான எடையுடனும் தொடர்ந்து எடைகுறைவாகவும் உள்ள குழந்தைகள்: 50% | படிக்கத் தெரியாத தாய்மார்களிடையே எடை குறைவான குழந்தைகள்: 45% |
| **33%** தலைசிறந்த ஆறு மாவட்டங்களில் உள்ள எடைகுறைவான குழந்தைகள் | **43%** மிகச் சிறந்த ஆறு மாவட்டங்களில் உள்ள எடைகுறைவான குழந்தைகள், | பிறக்கும்போது 2.5 கிலோவுக்கும் அதிகமாக ஆனால், தற்போது அவசியத்திற்கும் குறைவான எடையுள்ள குழந்தைகள்: 34% | பத்து அல்லது அதற்கும் அதிகமான வருடங்கள் படித்த தாய்மார்களிடையே எடை குறைவான குழந்தைகள்: 27% |
| | | 2.5 கிலோவுக்கு குறைவான எடையுடன் பிறந்து, தற்போது வளர்ச்சி குன்றி இருக்கும் குழந்தைகள்: 62% | படிக்கத் தெரியாத தாய்மார்களிடையே வளர்ச்சி குன்றிய குழந்தைகள்: 63% |
| | | 2.5 கிலோவுக்கும் அதிகமான எடையுடன் பிறந்து தற்போது வளர்ச்சி குன்றி இருக்கும் குழந்தைகள்: 50% | பத்து அல்லது அதற்கும் அதிகமான ஆண்டுகள் படித்த தாய்மார்களிடையே வளர்ச்சி குன்றிய குழந்தைகள்: 43% |

**மிக முக்கிய வெளிப்பாடு:**

- **சத்துக்குறைவான குழந்தைகள் விகிதம் மத்தியதர மற்றும் உயர் வருமானக் குடும்பங்களில் கணிசமாக இருந்தாலும், குறைந்த வருமானம் உள்ள குடும்பங்கள், குறிப்பாக இஸ்லாமியர்கள், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் குடம்பங்களிடையே அதிகமாக உள்ளது.**
- **பரவலாக 9 மாநிலங்களில் 3,360 கிராமங்களில் அக்டோபர் 2010 முதல் பிப்ரவரி 2011 வரை 5 வயதுக்கு குறைவான, ஒரு லட்சத்திற்கும் அதிகமான குழந்தைகளிடம் கணக்கெடுப்பு (சர்வே) எடுக்கப்பட்டது.**

**Indian Express 11.01.2012**




*Education Material Published on behalf of*

**Tamil Nadu Child Rights Protection Network by**
**Human Rights Advocacy and Research Foundation (HRF)**

*# 10, LDG Road, Little Mount, Saidapet, Chennai - 600 015, INDIA.*
*☎ 22353503, 22351919 Fax : 22355905, E-mail : humanrightsfoundation@yahoo.co.in*
*website : www.humanrightsadvocacyandresearchfoundation.org*